# I. பொருளாதாரச் செயலாற்றமும் சிக்கல்களும், கொள்கைகளும் – 1974

## 1. முன்னுரை

உண்மை அடிப்படையில் இலங்கையின் பொருளாதாரம் 1974இல் 3.4 சதவீதத்தால் வளர்ச்சியுற்றது. இது சென்ற ஆண்டில் அடைந்த வீதத்திலும் (3.5 சதவீதம்) பார்க்க சிறிது குறைவுடையதாகும். எனினும், 1971இலும் 1972இலும், முறையே ஏற்பட்ட 0.9 சதவீத 2.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இது ஒரு முன்னேறிய நிலையைக் காட்டுகிறது. 1974இல் ஏற்பட்ட 1.6 சதவீத[1] குறைந்த வீதக் குடித்தொகை அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், நிலையான விலைகளில் தனியாளின் உண்மை உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்பு 1.8 சதவீதமாகும். எனினும், இறுதியிற் குறிக்கப்பட்ட தொகை 1972இன் தனியாளின் உண்மை வருவாயிலும்பார்க்க அதிகரித்தும், 1973இன் எண்தொகையுடன் ஒத்தும் விளங்கியது. இவ்வாண்டின்போது வளர்ச்சிவீதம் வீழ்ச்சியுற்றிருந்தது. இவ்விதம் வீழ்ச்சியுற்றதற்கு நாட்டின் தேசியக் கணக்குகளிற் பெரும்பங்கை வகிக்கும் பெருந்தோட்டத்துறை உற்பத்தியில் ஏற்பட்ட பெருமளவு வீழ்ச்சியும், இதற்கு அடுத்த நிலையிற் தயாரிப்புத் தொழிலிலும், சுரங்கத் தொழிலிலும் ஏற்பட்ட வீழ்ச்சியுமே காரணமாகும். எனினும், வேளாண்மைத் துறையில் நெல்லுற்பத்தி குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக்காட்டி, தேயிலை, றப்பரில் ஏற்பட்ட வீழ்ச்சியை எதிரீடு செய்வதற்கு ஏதுவாய் இருந்தது

1974இல் ஏற்பட்ட ஆகக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார நிகழ்ச்சி கடுமையான விலைவீக்கமாகும். இது பொருளாதார வளர்ச்சியைத் தடை செய்ததோடு பொருளாதார நடவடிக்கையின் பல்துறை வளர்ச்சியைக் கடுமையாகப் பாதித்து, அபிவிருத்தியின் வளர்ச்சி வீதத்தைத் தடுத்தது. நுகர்வோரின் உண்மை வருவாய்களைப் பெருமளவு பாதிக்கும் முறையில் ஆண்டு முழுவதும் பணவீக்கம் தொடர்ந்து நிலவியது. பல்வகையான நுகர்வுப்பொருட்களின் பற்றுக்குறையாலும் பொதுமக்கள் அடிக்கடி பாதிக்கப்பட்டனர். விலையதிகரிப்பின் அளவை எடுத்துக்காட்டும் ஒரே குறிகாட்டியான கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி 1974இல் 12.3 சதவீதத்தால் மட்டுமே மிதமாக உயர்ந்திருந்தது. உண்மையில் நடைமுறை அடிப்படையில் கணிக்கப்பட்ட விலைக்குறிகாட்டி, 1974இல் ஏற்பட்ட கடுமையான பணவீக்க அமுக்கங்களை கூடிய அளவு சரியாகக் காட்டி இருக்கக்கூடும். மிக விலையுயர்ந்த இறக்குமதி உணவுப் பொருட்களாலும், இன்றியமையாத நுகர்வோர் பொருட்களினாலும், கைத்தொழில் மூலதனப் பொருட்களாலும் பணவீக்கம் ஏற்பட்டது. சென்றாண்டிலும் பார்க்க ஆண்டு முடிவில் பணநிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு அந்த அளவுக்கு முக்கியத்துவமற்றதெனினும், 1974இல் மிகப் பெருமளவாக விலைகள் உயர்ந்ததை விளக்க பணநிரம்பலின் அதிகரிப்பு மட்டும் போதிய காரணமாகாது. அதேவேளையில் பணநிரம்பல் 6 சதவீதத்தால் அதிகரிக்க, கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியினால் காட்டப்பட்ட பணவீக்க வீத அதிகரிப்பு 12.3 சதவீதமாகும். பணவீக்கத்திற்கு அரசாங்க வரவு

---

1. மக்கள் தொகையின் அதிகரிப்பின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணியாக விளங்கும் குடியகல்வு நீங்கலுக்கு ஏற்ப, 1.6 சதவீத வீதம் சீராக்கம் செய்யப்படவில்லை. குடியகல்வு நீங்கிய நிலையில் வளர்ச்சி வீதம் உயர்ந்திருந்தது. குடித்தொகையில் அதிகரிப்பின் சீராக்கப்பட்ட வீதங்களை அறிய அட்டவணை 1 – 2 பார்க்கவும். இது உண்மைநிலையை எடுத்துக் காட்டுகிறது.

செலவுத்திட்டம் பொறுப்பாய் அமையவில்லை. அதன் பொதுவான தாக்கம் சுருக்க விளைவையே ஏற்படுத்தியது.

சென்மதி நிலுவையில் ஏற்பட்ட பணக்குறை இதுவரையில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஆகக்கூடிய குறைவாக விளங்கிற்று. உலகப் பண்டச் சந்தைகளில் ஏற்பட்ட மிகப் பெரிய விலை உயர்வினால் இறக்குமதி உண்டியலில் ஏற்பட்ட பெரும் அதிகரிப்பே இதற்குக் காரணமாய் விளங்குகின்றது. இது இன்றியமையாத உணவுப் பொருட்கள், மூலப்பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிகளில் கணிசமான அளவு உயர்மட்டச் செலவை ஏற்படுத்தியது. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக முக்கிய மரபுவழி ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, இறப்பர், தேங்காய் ஆகியவற்றிற்கு இவ்வாண்டிற்தான் அதிக விலைகள் கிடைக்கப்பெற்றன. எனினும், இறக்குமதி உண்டியல் ஏற்படுத்திய அமுக்கத்தைக் குறைக்க பெருந்தோட்டப் பயிர்களில் இருந்து பெற்ற அதிகரித்த ஏற்றுமதி வருவாய்கள் ஓரளவுதான் துணைநின்றன. குறிப்பாக, தேயிலை இறப்பரின் உற்பத்தி வீழ்ச்சியுற்றதன் காரணமாக பண்டச் செழிப்பினால் பெறவேண்டிய முழு நன்மைகளை மரபுவழி ஏற்றுமதிக் கைத்தொழில்கள் பெறமுடியவில்லை வெளிநாட்டு வர்த்தக குறைபாடு அதிகரித்த வங்கிக் கடன்பாடுகளைப் பயன்படுத்தியதனாலும். பல்வகை மூலங்களில் இருந்து குறுங்காலக் கொடுகடன்களைப் பெற்றதனாலும் நிதியீட்டம் செய்யப்பட்டது. இன்றியமையாத பொருட்களின் இறக்குமதிகள் மிகக் கடுமையாக குறைக்கப்பட்ட நிலையிலும் சென்ற ஆண்டுகளிலும் பார்க்க கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவி கூடிய நிலையில் இருந்தும் முந்திய மட்டங்களில் இறக்குமதி அளவைப் பேண இத்தொகை போதியதாய் அமையவில்லை. இதன் விளைவாக ஆண்டு முடிவில், ஒரு ஆண்டிற்குள் தீர்க்கப்படவேண்டிய குறுங்கால பொறுப்புக்கள் ஆகக்கூடிய மட்டத்தை அடைந்தன.

## 2. பொருளாதாரச் செயலாற்றம்

### (அ) நாட்டின் மொத்த உற்பத்தி

பண அடிப்படையில் 1974இல் நாட்டின் மொத்த உற்பத்தி 30 சதவீதத்தால் உயர்ந்திருந்தது. ஒப்புநோக்குகையில், 1973இல் இதனின் அதிகரிப்பு 19.6 சதவீதமாக விளங்கியது. எனினும், நிலையான விலைகளின்படி 1974இல் ஏற்பட்ட அதிகரிப்பு 3.4 சதவீதமாகவும் அதற்கு முந்திய ஆண்டு 3.5 சதவீதமாகவும் விளங்கியது. பணத்தின் பெறுமதிக்கும், நிலையான விலைகளுக்குமிடையில் நிலவிய குறிப்பிடத்தக்க வேறுபாடு, இவ்வாண்டில் எற்பட்ட விலை அதிகரிப்பின் பெரும் அளவை எடுத்துக்காட்டுகிறது.

ஏற்கெனவே எடுத்துக்காட்டப்பட்டதற்கமைய 1971, 1972இன் வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 1973, 1974களில் ஏற்பட்ட வளர்ச்சி வீதங்கள் உயர்ந்திருப்பினும், 1972இல் செயற்படத் தொடங்கிய நடைமுறையில் இருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தின் தேவைக்கு ஏற்ப செயலாற்றம் அமைந்திருக்கிறதா என்பதை இங்கு மதிப்பிடவேண்டும். திட்டத்தில் எதிர்பார்க்கும் இலக்கான 6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1974இல் மொத்தத் தேசிய

உற்பத்தியிலேற்பட்ட வளர்ச்சிவீதம், ஆகக் குறைவுடையதாகவே விளங்குகிறது. ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட சராசரி வளர்ச்சி வீதம் ஏறக்குறைய *3.1* சதவீதமாகும். இது எதிர்பார்த்த இலக்கிலும் பார்க்கக் குறைவுடையதாகும். *1960*ஆம் ஆண்டுகளில் நிலவிய பொருளாதாரச் செயலாற்றத்துடன் ஒப்பிடுகையில், அண்மை ஆண்டுகளின் பொருளாதார வளர்ச்சி பின்னடைந்துள்ளது.

அட்டவணை I - 1

**நிலையான (1959) விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவகைப்படியான வளர்ச்சி**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1972 | 1973 | 1974 | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | 1973 | 1974 |
| 1. விவசாயம், காட்டுத் தொழில், வேட்டையாடுதல், கடற்றொழில் ... .. | 3,478.4 | 3,387.6 | 3,558.3 | — 2.6 | + 5.0 |
| 2. சுரங்கத் தொழிலும், பாரீக்குழித்தொழிலும் | 67.5 | 266.2 | 190.9 | +294.4 | — 28.3 |
| 3. தயாரிப்புத் தொழில ... ... | 1,400.5 | 1,417.2 | 1,359.4 | + 1.2 | — 4.1 |
| 4. கட்டடவாக்கம் ... ... ... | 505.0 | 516.2 | 552.8 | + 2.2 | + 7.1 |
| 5. மின்சாரம், வாயு, நீர், சுகாதாரப் பணிகள்... | 31.0 | 31.3 | 31.5 | + 0.6 | + 1.0 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்பு ... ... | 987.6 | 1,018.7 | 1,053.7 | + 3.1 | + 3.4 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் ... | 1,327.2 | 1,383.2 | 1,449.8 | + 4.2 | + 4.8 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துக்கள் ... ... .. | 135.6 | 141.9 | 164.9 | + 13.8 | + 16.2 |
| 9. குடியிருப்புகளின் உடைமை ... ... | 312.6 | 318.1 | 344.4 | + 1.8 | + 8.8 |
| 10. பொதுநிருவாகமும், பாதுகாப்பும் ... | 522.2 | 566.6 | 609.1 | + 8.5 | + 7.5 |
| 11. பணிகள் ... ... | 1,334.0 | 1,379.4 | 1,440.6 | + 3.4 | + 4.4 |
| 12. உள்நாட்டு மொத்த உற்பத்தி ... | 10,101.6 | 10,426.4 | 10,755.4 | + 3.2 | + 3.2 |
| 13. வெளிநாட்டிலிருந்து பெற்ற வருவாயின் தேறிய காரணி ... ... | — 71.9 | — 43.9 | — 24.9 | | |
| 14. நாட்டு மொத்த உற்பத்தி ... . | 10,029.7 | 10,382.5 | 10,730.5 | + 3.5 | + 3.4 |

*1973*இற்கும் *1974*இற்குமிடையில் பெருமளவு கணிசமான மாற்றங்களை பொருளாதாரத்தில் சில முக்கிய உற்பத்தித் துறைகள் ஏற்படுத்தியுள்ளன. சுரங்கத் துறையிலும் பார்க்குழித் துறையிலும் *1973*இல் உற்பத்தி *294* சதவீதத்தால் அதிகரித்து, *1974*இல் *28.3* சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. *1973* இல் சுரங்கத் துறையின் வளர்ச்சியின் பெரும் அதிகரிப்பிற்குக் காரணம் அடிப்படை ஆண்டாகிய *1972*இன் எண்தொகையாகிய ரூ. *675* இலட்சத்திலும் பார்க்க *1973*இல் ஏற்தட்ட உற்பத்தியின் அதிகரிப்பு பெருமளவாக விளங்கியதாகும். எனவே, *1974*இல் சுரங்கத் தொழிலின் வளர்ச்சி வீதம் வீழ்ச்சியுற்றதற்கு சென்றூண்டில் ஏற்பட்ட ஆகக்கூடிய வளர்ச்சி வீதமே காரணமாகும். *1974*இல் பதிவுசெய்யப்பட்ட உற்பத்திக் குறைவுடையதாகவே இருந்ததென்று ஊகிக்கப்படுகின்றது. இதற்குக் காரணம் *1973* இல் வரியைப் பொறுத்தவரை இரத்தினக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்ட உந்துதல்கள் கூடியளவு வாய்ப்புடையதாகவே விளங்கியது.

தனியார்துறைக் கைத்தொழில்களுக்கு இடப்படும் உள்ளீடுகளின் அளவு, குறைக்கப்படும் அளவிற்கு மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்தமையாலும், விலை உயர்வுகள் காரணமாக சில கைத்தொழிற் பொருட்களைக் குறைந்தளவிலேயே மக்கள் கொள்வனவு செய்ததனுலும், தயாரிப்புத்தொழில் பெருமளவு வீழ்ச்சியுற்றது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் வேளாண்மைத் துறையின் செயலாற்றம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது. நெல் உற்பத்தியிலும் உப உணவுப் பயிர்ச்செய்கையிலும் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டதே இம்முன்னேற்றத்திற்கு முழுக் காரணமாக விளங்குகிறது. இத்தகைய வாய்ப்பான நிலை இத்துறையில் நிலவியபோதும், பெருந்தோட்டத்துறையில் உற்பத்தி குறிப்பிடத்தக்களவால் வீழ்ச்சியுற்றது. சுரங்கத் தொழில் தயாரிப்புத் துறை நீங்கலாக ஏனைய துறைகளின் செயலாற்றம் ஏமாற்றமற்றதாக இருந்தபோதும், இவ்வாண்டின் மொத்தத் தேசிய உற்பத்தி மேலும் வளர்ச்சியுருததற்கு முக்கிய காரணம் பெருந்தோட்டத் துறையின் உற்பத்தி வீழ்ச்சியேயாகும்.

1973உடன் ஒப்பிடுகையில், 1974இல் வர்த்தக மாற்றுவீதம் ஓரளவாகவே வீழ்ச்சியுற்றது. இதற்குக் காரணம் ஏற்றுமதி விலைகள் குறிப்பிடத்தக்களவு உயர்ந்ததேயாகும். எனினும், நாட்டின் ஏற்றுமதிகளின் கொள்வனவு ஆற்றல் கணிசமானளவால் வீழ்ச்சியுற்றது. ஏற்றுமதி விலைகளிலும் பார்க்க, இறக்குமதிகளின் விலைகள் கூடியளவால் அதிகரித்தமையே இதற்குக் காரணமாகும். இவ்வாண்டில் வர்த்தக மாற்றுவீதம் 10.7 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஒப்புநோக்குகையில் 1973இல் 13.3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. வர்த்தக மாற்று வீதத்தின் வீழ்ச்சி காரணமாக, ஏற்பட்ட இறக்குமதி ஆற்றலின் இழப்பு மட்டும் 1959இன் (நிலையான) விலைகளின்படி ரூ 11,400 இலட்சமாகும்.

### அட்டவணை 1 – 2

### வளர்ச்சியின் வீதங்களும் குடித்தொகை உயர்ச்சியின் வீதங்களும்

| ஆண்டு | வளர்ச்சியின் வீதம் | சனத் தொகை வளர்ச்சியின் அதிகரிப்பு வீதம் | அதிகரிக்கும் குடித் தொகைக்கு இடம்கொடுத்த வளர்ச்சியின் வீதம் | தேறிய குடியகல்வுக்கு சீராக்கப்பட்ட குடித் தொகையின் அதிகரிப்பு | நிலையான விலைகளில் தனியாளுக்கான வருவாய் |
|---|---|---|---|---|---|
| 1965 ... | 2.5 | 2.4 | 0.1 | 2.4 | 676 |
| 1966 ... | 3.5 | 2.5 | 1.0 | 2.4 | 683 |
| 1967 ... | 5.0 | 2.3 | 2.7 | 2.4 | 702 |
| 1968 ... | 8.4 | 2.5 | 5.9 | 2.4 | 742 |
| 1969 ... | 4.5 | 2.2 | 2.3 | 2.2 | 759 |
| 1970 ... | 4.2 | 2.1 | 2.1 | 2.1 | 774 |
| 1971 ... | 0.9 | 1.5 | –0.6 | 2.2 | 770 |
| 1972 ... | 2.5 | 2.0 | 0.5 | 3.2 | 774 |
| 1973 ... | 3.5 | 1.8 | 1.7 | 2.0 | 788 |
| 1974 ... | 3.4 | 1.6 | 1.8 | 1.8 | 801 |

மேலேயுள்ள அட்டவணை காட்டுவதற்கு அமைய 1973, 1974இல், நிலையான விலைகளின்படி, தனியாளின் வருவாய் முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. உண்மை நியதிகளின்படி, தனியாளின் வருவாய் 1973இல் ரூ 788 ஆக இருந்து 1974இல் ரூ. 801 ஆக உயர்ந்துள்ளது அண்மை ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள தொடர்பான குறைந்த வீத வளர்ச்சியுடனும், பொருளாதாரத்தைப் பொதித்துள்ள பணவீக்க அமுக்கங்களுடனுமே, மேற்குறித்த தனியாள் வருவாய் அதிகரிப்பை நினைவிற்கொள்ளவேண்டும். கடந்த சில ஆண்டுகளாக தனியாளின் உண்மை வருவாய் ஏறக்குறைய ரூ. 780 என உறுதிசெய்யப்பட்டது எதைக் காட்டுகிறதென்றால் ஒருபுறம் விலை அதிகரிப்புகளுக்கு ஈடு கொடுக்கும் முறையில் வருவாய்கள் சிறிதளவு அதிகரிக்கப்பட்டதுடன் மறுபுறம் இந்தியத் தொழிலாளர்கள் குடியகல்வு செய்யப்பட்டதனுல் கணிசமானளவு குடித்தொகை வளர்ச்சி வீதம் வீழ்ச்சியுற்றதையும் காட்டுகிறது. தனியாளின் வருவாய் மட்டத்தை நிலையாக வைத்திருப்பதற்கு குடித்தொகை வளர்ச்சியின் வீழ்ச்சி ஒரு முக்கிய காரணியாகும். மேலேயுள்ள அட்டவணை 1968 இற்குப் பின் குடித்தொகை வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. 1972 இற்கும் பின் மக்கள் தொகை வீதம் 2 சதவீதத்திற்குக் கீழ் வீழ்ச்சியுற்று அதன்பின் இம்மட்டத்தில் இருந்து உயரவில்லை. மக்கள்தொகை எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டும் என்ற கொள்கைகளுக்கு மக்களிடையே ஆதரவு உண்டென்பதை மத்திய வங்கி அண்மையில் நடாத்திய அளவைகள் காட்டுகின்றன. இந்தியத் தொழிலாளரின் குடியகல்விற்கு இடம்விட்டுக்கூட நோக்குகையில், அதாவது 1970 தொடங்கி, 35,000 பேர் ஆண்டுதோறும் வெளிச்சென்ற நிலையிலும் மக்கட்தொகையின் எண்ணிக்கை வீதம் தொடர்ந்து வீழ்ச்சியுற்றுச் செல்வதற்கு அறிகுறிகள் உண்டு. 1973இலும் 1974இலும் முறையே நிலவிய 1.8 சதவீத 1.6 சதவீத சிறிய வளர்ச்சி வீதம் இக்காரணியையே காட்டுகின்றது. இலங்கையைவிட்டு வெளியேறிய இந்தியத் தொழிலாளர்கள் அடிப்படையில் இவ்வீதங்கள் சீராக்கம் செய்யப்படின், உண்மையான வீதங்கள் அட்டவணை 1 – 2 இல் கண்டுள்ளபடி வீதங்கள் உயர்வாக இருக்கும்.

**(ஆ) நாணய அபிவிருத்திகள்**

பணமும் கொடுகடனும்

1974ஆம் ஆண்டில் ஏற்பட்ட 6 சதவீத நாணய விரிவு 1973ஆம் ஆண்டில் ஏற்பட்ட 12 சதவீத விரிவுடன் ஒப்பிடுகையில், எவ்விதத்திலும் முக்கியத்துவம் உடையதாகக் காணப்படவில்லை. இருப்பினும், இவ்வாண்டில் ஏற்பட்ட விலை உயர்வுகளின் அளவு முந்திய எந்த ஆண்டிலும் பார்க்க உயர்வாகவே இருந்தது. விலை உயர்வுகள் வெளிநாடுகளின்மூலம் இறக்குமதி வாயிலாக ஏற்பட்டதில் காரணமாக பணவீக்கத்திற்குரிய காரணங்களை உள்நாட்டு நாணய நிரம்பல் விரிவின் அடிப்படையில் கணிக்கமுடியாது.

1974ஆம் ஆண்டில் பணநிரம்பல் 1973ஆம் ஆண்டின் சராசரி மட்டத்தை விட ரூ. 4,530 இலட்சம் அல்லது 18 சதவீதத்தால் அதிகரித்தது. 1973இல் இதன் சராசரி மட்டம் ரூ. 24,960 இலட்சமாக இருக்கையில், அது 1974இல் ரூ 24,490 இலட்சமாக உயர்ந்தது. அப்படியிருந்தும் பண நிரம்பல் முந்திய

## அட்டவணை I – 3

### பண நிரம்பலின் மாற்றங்களும், வாழ்க்கைச் செலவு குறிகாட்டிகளும் 1965 – 1974

| ஆண்டு | பண நிரம்பலின் மாதாந்தச் சராசரி மட்டம் | | வருட முடிவில் பண நிரம்பலின் சதவீத அதிகரிப்பு | வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டியின் சதவீத அதிகரீப்பு |
|---|---|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்களில் | சதவீத மாற்றம் | | |
| 1965 .. | 1,650 | + 6.8 | + 5.8 | + 0.3 |
| 1966 ... | 1,686 | + 2.2 | — 3.3 | — 0.2 |
| 1967 ... | 1,732 | + 2.7 | + 9.0 | + 2.2 |
| 1961 ... | 1,851 | + 6.9 | + 5.8 | + 5.8 |
| 1969 ... | 1,893 | + 2.3 | — 1.6 | + 7 4 |
| 1970 ... | 1,969 | + 4.0 | + 4.5 | + 5.9 |
| 1971 ... | 2,102 | + 6.7 | + 9.3 | + 2.7 |
| 1972 ... | 2,183 | + 4.4 | + 15 4 | + 6.3 |
| 1973 | 2,496 | + 13.0 | + 12.0 | + 9.7 |
| 1974 .. | 2,949 | + 18.1 | + 6.0 | + 12.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஆண்டைவிட 18 சதவீதத்திற்குமேல் நிலவியது மட்டும், இவ்வாண்டில் நிலவிய மிக உயர்ந்த மட்டத்தை விளக்குவதாய் இல்லை. மிக இன்றியமையாத பொருட்களைத் தவிர பெருமளவான நுகர்வுப் பொருட்கள் விலைக்குறிகாட்டியில் அடங்கவில்லை. பண நிரம்பல், பணவீக்கப்போக்கிற்கு முக்கிய காரணமாயின், ஆண்டில் நிகழ்ந்த பெருமளவிலான விலை உயர்விற்கு, இதைவிடக் கூடுதலான பணநிரம்பல் ஏற்றம் அதற்கு முதற் காரணமாய் இருந்திருக்கும்.

பண நிரம்பலுக்கும் விலை மட்டத்திற்கும் இடையிலான தொடர்பை எடுத்துக்காட்டும் ஏற்ற குறிகாட்டிகள் இல்லாத நிலையில் பண வீக்கத்தை ஏற்படுத்துவதில் பணம் வகித்த தன்மையை வங்கித் தீர்ப்பனவுகளில் இருந்து காணலாம். 1972ஆம் ஆண்டில் ரூ. 11,586 இலட்சமாகவிருந்த மாதாந்தச் சராசரி வங்கித் தீர்ப்பனவுகள், 1973ஆம் ஆண்டில் ரூ. 16,014 இலட்சமாகவும் 1974இல் ரூ. 20,636 இலட்சமாகவும் இருந்தன. அதேபோல கேள்வி வைப்புக்களின் புழக்கத்தின் வீதம் 1972இல் 2.17 சதவீதமாகவிருந்து, 1973 இல் 2.20 சதவீதமாகவும், 1974இல் 2.27 சதவீதமாகவும் உயர்ந்து காணப்பட்டது. இவ்வறிகுறிகள் நிலவியபோதும், பணத்தின்மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யும்முறை பொருளாதாரத்தில் இன்றும் முக்கியத்துவம் வகிப்பதனுலும் பெரும்பாலான, கொடுக்கல் வாங்கல்கள் வங்கிகளின்மூலம் நடைபெருததனுலும், பணவீக்கத்திற்குரிய ஏனைய குறிகாட்டிகள், நாணயத் தாள்கள், குத்திகள் ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பின் வாயிலாக அறியவேண்டியுள்ளது. பெருந்தொகைப் பெறுமதியுடைய நாணயத்தாள்கள் குறிப்பாக ரூ. 100, ரூ. 50 ஆகியவற்றின் அளவு பெருமளவால் அதிகரித்தது. இந்நாணயத்தாள்களின் வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பதுக்கி வைக்கப்படும் நோக்கம் காரணமல்ல. மாருக, பொருள்களினதும் பணிகளினதும் உயர் விலைகளே இதற்குக் காரணமெனலாம். சில கொடுக்கல் வாங்கல்களுக்கு ரூ. 10. ரூ. 5 நாணயத்தாள்கள் வசதியற்றமையாயிற்று. முந்திய வருடங்களில் நிலையாக

இருந்த ரூ. 1 தாளினதும் 50 சதக் குற்றியினதும் புழக்கம், 1974இல் கணிசமானளவு அதிகரித்துள்ளது. இதற்கு முன்னர் குறைந்த பெறுமதியுள்ள நாணயங்களின் மூலம் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு இந்த நாணயங்கள் பயன்படுத்தப்பட்டதே காரணமாகும்.

பண வீக்கத்தின் அளவை முழுமையாக எடுத்துக்காட்டுவதினின்று பண நிரம்பல் மட்டத்தினைத் தடைசெய்த காரணிகளுள் ஒன்று ரூ. 1792 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்த வெளிநாட்டு இருப்புக் சொத்துக்களேயாகும். இது சென்மதி நிலுவையிலும் பெருமளவிலான குறைவை ஏற்படுத்தியது. மத்திய வங்கியின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் ரூ. 2,789 இலட்சத்தாற் குறைந்தமையே வங்கித் தொழிலுக்குரிய வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களில் ஏற்பட்ட ஆகக் கூடுதலான வீழ்ச்சியாகும்.

நாணய விரிவிற்கு முக்கிய காரணியாக, வர்த்தக வங்கிகளால் அரச கூட்டுத்தாபனங்களுக்கும் கூட்டுறவுக்கும் கொடுக்கப்பட்ட கடன்களைக் குறிப்பிடலாம். அரச கூட்டுத்தாபனங்கள் உட்பட தனியார் துறைக்கு முழுமையாகக் கொடுக்கப்பட்ட கொடுகடன் ரூ. 10,717 இலட்சத்தால் உயர்ந்தது. ஒப்புநோக்குகையில், 1973ஆம் ஆண்டில் ரூ 226 இலட்சத்தைக் கொண்ட பணச் சுருக்கமே ஏற்பட்டிருந்தது. அரச கூட்டுத்தாபனங்கள் மட்டுமே ரூ. 6,415 இலட்சத்தைக் கடனுகப் பெற்றுள்ளன. இதற்கு எதிரீடாக, இக்கூட்டுத்தாபனங்களின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ரூ 211 இலட்சம்கொண்ட மிகச் சிறிய அளவால் உயர்ந்தன. பெரும்பாலும், இறக்குமதி விலை உயர்வின் காரணமாக தனியார்துறைக்கு அளிக்கப்பட்ட கொடுகடன் ரூ. 2,411 இலட்சத்தால் உயர்ந்தது. தனியார்துறையின் சேமிப்புக்களின் வாயிலாக இத்தொகை பெரும்பாலும் ஈடுசெய்யப்பட்டது. கூட்டுறவு சங்கங்களுக்கு அளிக்கப்பட்ட கொடுகடன்களில் ஏற்பட்ட உயர்வு பெரும்பாலும் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கும் வேளாண்மைக் கடன்களுக்குமேயாகும். மேலும், 1974 ஆம் ஆண்டு மே 24ஆம் திகதி தொடக்கம் செயற்படுத்தப்பட்ட கொடுகடன் உச்சவரம்பு அவசியமற்ற தேவைகளுக்குக் கொடுகடன்கள் வழங்கப்படுவதை தடைசெய்தது. இது நீங்கலாக தனியார்துறைக்கு கொடுகடன் தேவைகளின் அளவு குறைவாகவே இருந்தது. இதற்கு அவர்களுக்கு அளிக்கப்பட்ட குறைந்த அளவிலான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகளும் உயர்ந்த இறக்குமதி விலைகள் காரணமாக சிறியளவான மூலப்பொருட்களே பெறவேண்டியிருந்தமையும் காரணமாகும். முடிவுப்பொருட்களின் உயர்ந்த விலைகளும் நுகர்வோரின் எதிர்ப்பும் விற்பனைகளின் அளவைக் கட்டுப்படுத்தியது. மேலும் வியாபாரத்தின் நிலையற்ற தன்மை காரணமாக தனியார்துறையின் சில பகுதிகளில் முதலீடு செய்வதற்கு தயங்கும் மனோநிலை நிலவியது. இக்காரணங்களால் முதலீடு செய்யும் வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் பல தனியாட்களும் வியாபார நிலையங்களும் தங்களது பணத்தை வங்கிகளின் தவணை சேமிப்பு வைப்புக்களில் வைப்பது உகந்ததென்று கருதினர்.

அரசாங்கத்துறையின் கொடுக்கல் வாங்கல்களும் நாணயவிரிவைத் தடைசெய்யத் துணைசெய்தன. காரணம், அரசாங்க வரவுசெலவுத்திட்ட தொழிற்பாடுகள் பொதுவான சுருக்க விளைவை ஏற்படுத்தின. அரசாங்கம் தனது

தேறிய பணத் தொழிற்பாட்டுக்குறையைப் பெருமளவு பொதுமக்களின் சேமிப்பிலிருந்து நிதியீட்டம் செய்யத்தக்க நிலையில் இருந்தது.

வர்த்தக வங்கிகள் வழங்கிய தொகை குறைக்கப்பட்டதும், வங்கிகளில் வைக்கப்பட்ட அரசாங்க வைப்புக்களில் ஏற்பட்ட கணிசமான அளவு அதிகரிப்பும் திறைசேரியில் வைக்கப்பட்ட பணநிலுவைகளின் அதிகரிப்பும் இவ்வாண்டில் நாணய விரிவு ஏற்படுவதைத் தடைசெய்ய உதவின.

**அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன்**

மறுபுறம் அரச கூட்டுத்தாபனங்களின் கொடுகடன் தேவைகள் மிகப் பெருமளவாய் உயர்ந்து தாங்கமுடியாத மட்டத்தை அடைந்தது. இறக்குமதி மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்தமையும், இம்முயற்சிகள் பலவற்றின் தொழிற்படும் இழப்புக்களை ஈடுசெய்ய நிதி தேவைப்பட்டதுமே இத்தகைய அதிகரித்த கொடுகடன் தேவையை ஏற்படுத்தியது. அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட வங்கிக் கொடுகடன் 1974 முடிவில் என்றுமிலாதளவு ரூ. 10,582 இலட்சமாக உயர்ந்து விளங்கியது. இது 1973இன் மட்டத்திலும் பார்க்க ரூ. 640 இலட்ச அதிகரிப்பை எடுத்துக்காட்டுகிறது. இறக்குமதிகளிலேயே ஏறக்குறைய முழுதும் தங்கியிருந்த நிறுவனங்களே ஆகப் பெருமளவு கடனாளிகளாக விளங்கின. இவ்விவரங்கள் அட்டவணை 1-4இல் தரப்பட்டுள்வன. சிலவேளைகளில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களினதும் ஏனைய பொருட்களினதும் அளவு குறைந்த நிலையிலும் 1974இல் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட பெருமளவு உயர்வினால் அதிகரித்த கொடுகடன் தேவைகள் தோன்றின. இலங்கை உரக் கூட்டுத்தாபனத்தைப் பொறுத்தவரை அதனின் கொடுகடன் தேவைகள் 1973 மட்டத்திலும் பார்க்க ரூ. 2562 இலட்சத்தால் அதிகரித்தன. மசகெண்ணெயின் விலைகள் மிகப் பெருமளவால் அதிகரித்ததனால், வளமாக்கிகளின் இறக்குமதி விலைகள் 400 சதவீதத்தால் அதிகரித்ததே மேற்குறித்த கூடிய கொடுகடன் தேவையை ஏற்படுத்தியது. 1974 முடிவில் உரக் கூட்டுத்தாபனத்தில் வழங்கப்பட்ட மொத்த முற்பணங்கள் ரூ. 2887 இலட்சமாகும். அது ஓரளவுக்கு நெற்பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்டது. உரத்தின் அளவு பெருமளவு வீழ்ச்சியுற்றதனால் உரத்தின் இருப்புக்கள் குவிந்து கிடந்ததை இது ஓரளவு எடுத்துக்காட்டுகிறது. இதுபோலவே பன்னாட்டுச்சந்தையில் பருத்திக்கும் நூல் இழைக்கும் அதிகரித்த விலைகள் ஏற்பட்டதனால் தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் அதிகரித்த விலையிலேயே பருத்தியை இறக்குமதிசெய்ய வேண்டியிருந்தது. இதன்விளைவாக 1974இல் தேசியப்புடவைக் கூட்டுத்தாபனத்தின் கொடுகடன் தேவைகள் ரூ. 832 இலட்சத்தாலும் நெசவு நிரம்பல்கள் கூட்டுத்தாபனத்தின் கொடுகடன் தேவைகள் ரூ. 746 இலட்சத்தாலும் உயர்ந்தன. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினைப் பொறுத்தவரை, தனக்குத் தேவையான எல்லா மசகெண்ணெய்யையும் இறக்குமதி செய்கிறது. *கொடுகடன் தேவைகள் ரூ. 516 இலட்சத்தால் அதிகரித்தது. மசகெண்ணெயின் விலை அதிகரித்ததெனத் தொடர்ந்து வழங்குநர்களால் வழங்கப்பட்ட கொடுகடன்கள் கட்டுப்படுத்தப்பட்டதும் இக்கூட்டுத்தாபனத்தால் உள்ளூர் சந்தையில் விற்கப்படும் அதனின் உற்பத்திகளுக்கான செலவை முழுமையாகப் பெறமுடியவில்லை. கப்பல் எரிபொருளின்

## அட்டவணை 1 – 4

### வர்த்தக வங்கிகளால் அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கு கொடுத்த முழு முற்பணம்

| | முழு முற்பணம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | திசெம்பர் 1973 தொகை | மாச்சு 1974 மாற்றம் | யூன் 1974 மாற்றம் | செத்தெம்பர் 1974 மாற்றம் | ஒற்ரோபர் 1974 மாற்றம் | திசெம்பர் 1974 தொகை | திசெம்பர் 1974 தொகை |
| 1. இலங்கை மின்வலுச் சபை ... | 20.8 | + 0.5 | – 2.4 | + 1.3 | – 2.0 | 22.3 | + 1.3 |
| 2. இலங்கை போக்குவரத்துச் சபை ... | 39.7 | + 2.3 | – 0.4 | – 3.0 | – 4.3 | 44.2 | + 4.5 |
| 3. இலங்கை பெற்ரோலிய கூட்டுத்தாபனம் ... | 23.4 | + 31.6 | + 12.0 | – 4.6 | + 16.8 | 75.0 | + 51.6 |
| 4. கிழைத்தாள் ஆலைக் கூட்டுத்தாபனம் ... | 14.3 | — | + 13.8 | – 0.5 | + 18.5 | 30.9 | + 16.6 |
| 5. தேசிய பால்சபை ... | 73.8 | + 4.2 | + 8.9 | + 5.6 | + 4.1 | 54.9 | – 18.9 |
| 6. இலங்னகப் பசளைக் கூட்டுத்தாபனம் ... | 32.5 | + 55.2 | + 123.8 | + 188.3 | + 203.4 | 288.7 | + 256.2 |
| 7. தேசிய புடவைக் கூட்டுத் தாபனம் ... | 15.4 | + 8.1 | + 72.9 | + 43.9 | + 39.9 | 98.6 | + 83.2 |
| 8. நெசவு வழங்கல் கூட்டுத் தாபனம் ... | 6.6 | + 50.9 | + 74.5 | + 57.1 | + 59.4 | 81.2 | + 74.6 |
| 9. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ... | 10.8 | + 5.3 | – 9.0 | + 0.3 | + 1.9 | 19.7 | + 8.9 |
| 10. அரச பொறியியற் கூட்டுத் தாபனம் ... | 20.0 | – 1.3 | + 6.3 | + 6.1 | + 6.8 | 26.6 | + 6.6 |
| 11. அரச வர்த்தகக் கூட்டுத் தாபனம் (பொது) ... | 3.8 | + 5.3 | + 12.5 | + 9.3 | + 13.0 | 27.2 | + 23.4 |
| 12. அரச வர்த்தகக் கூட்டுத் தாபனம் (இழுபொறிகள்) ... | 3.6 | + 6.2 | + 6.4 | + 10.5 | + 6.9 | 2.6 | – 1.0 |
| 13. அரச வர்த்தக கூட்டுத்தாபனம் திரட்டப்பட்ட (எற்று மதிகள்) ... | 3.3 | – 1.4 | + 2.0 | + 16.1 | + 14.9 | 16.6 | + 13.3 |
| 14. அரச வர்த்தகக் கூட்டுத் தாபனம் (புடவை) ... | 0.5 | + 18.5 | – 0.4 | + 7.2 | + 22.2 | 30.8 | + 30.3 |
| ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 149.5 | + 11.4 | + 26.1 | + 57.6 | + 62.2 | 240.3 | + 90.8 |
| மொத்தம் ... | 418.0 | + 196.8 | + 347.0 | + 395.2 | + 469.3 | 1060.1 | + 641.5 |

இலாபமின்மையும், இந்நிலைக்குக் காரணமாகும். புடவை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு – சலுசல உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் புடவைகளைப் பெருமளவில் இருப்பில் வைத்திருப்பதன் காரணமாக அதிகப்படியான கொடுகடனுக ரூ. 303 இலட்சம் தேவைப்பட்டது அரச பொறியியல் கூட்டுத்தாபனம், அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் (பொது) இலங்கை மின்சார சபை போன்ற சேவைகள், கூட்டுத்தாபனங்கள் ஒவ்வொன்றினதும் பேரிலும் வெளிநின்ற கொடுகடன்கள் ரூ. 200 இலட்சத்தைத் தாண்டியிருந்தன.

வணிக வங்கிகளின் முழுக் கொடுகடன்களின் அரச கூட்டுத்தபனங்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை 1974 முடிய 30 சதவீதமாக இருந்தது. பெரும்பாலான கூட்டுத்தாப்னங்கள் அடிப்படைப் பொருட்களின் உற்பத்தி

யிலும் இன்றியமையாத பணிகள் ஆற்றியதிலும் ஈடுபட்டிருந்ததெனினும், எளிதாக பெறக்கூடிய வாய்ப்பு இருந்ததன் காரணமாக வங்கிக்கொடுகடன் வசதிகளை தாராளமாக பயன்படுத்தியுள்ளன. அரச கூட்டுத்தாபனங்களுக்கு உதாரணமாக கொடுகடன்கள் கொடுக்கப்பட்டதன் விளைவாக தனியார்துறையிலுள்ள ஏனைய இன்றியமையாத பணிகளுக்கு கொடுகடன் வசதிகள் கட்டுப்படுத்தப்பட்டதோடு வங்கித் தொழிலின் திரவத்தன்மை கணிசமானளவு குறைக்கப்பட்டது.

பொதுவாக கூட்டுத்தாபனத்துக்கு மட்டுமின்றி தனிப்பட்ட கூட்டுத்தாபனங்களுக்கும் அளிக்கப்படும் வங்கிக்கொடுகளின்மீது உச்சவரம்பு விதிக்க வேண்டும் எனும் முடிவு தவிர்க்கமுடியாததாகும். 1974ஆம் ஆண்டில் செய்த அதேயளவில், கூட்டுத்தாபனங்கள் தங்களது வியாபாரங்களை வங்கிக்கொடுகடன்களைக் கொண்டு செய்யுமாயின் பணத்தையும், கொடுகடனையும் நிர்வகித்தல் மேலும்மேலும் கடினமாக்கிக் கொண்டுவரும். நடைமுறைக்கு உகந்த முறையிலான இறக்குமதித் திட்டங்களையும் உற்பத்தி விற்பனவு ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கிடையிலே மேலான ஒழுங்கிணைப்பையும் கையாளுவதின்வாயிலாக முழுமையான கொடுகடன்களை இதைவிடக் கீழான மட்டத்தில் வைத்திருந்திருக்கலாம். நடைமுறைக்கு ஒவ்வாத இறக்குமதிக் கொள்கைகளும் விலையேற்றத்திற்கு எதிராக நுகர்வோரால் காட்டப்பட்ட எதிர்ப்பும் இக்கூட்டுத்தாபனங்களின் பண நெருக்கடி நிலைக்கு பொறுப்பாய் இருந்தன.

(இ) விலைகள்

1974 ஆம் ஆண்டில் ஏற்பட்ட விலை உயர்வுகள் 1973 இல் ஏற்பட்ட விலை உயர்வுகளைவிட அதிகமாக இருந்ததோடு இறக்குமதிப் பொருட்களையும் உள்ளூரில் உற்பத்திப் பொருட்களையும் சம நிலையில் பாதித்தது. 1973 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட இன்றியமையாத உணவுப்பொருட்களின் விலை மிக உயர்ந்த நிலையிற் காணப்பட்டது. 1974 இல் அவை மேலும் உயர்ந்து இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்தது. இறக்குமதி வாயிலாக ஏற்பட்ட பண வீக்கம் எல்லா விலை அமைப்பையும் அடிப்படையில் பாதித்ததோடு உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களினதும் பணிகளினதும் விலைகளை உயரச் செய்வதற்கு காலாய் இருந்தன. உணவுப் பொருட்கள் தவிர போக்குவரத்தினதும் ஏனைய தனியார் பணிகளின் செலவையும் பெருமளவில் உயர்த்தியதோடு உயர்வின் தாக்கத்தை எல்லா பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பரப்புவதற்குப் பொறுப்பாய் இருந்தது.

மேற்குறிப்பிட்ட நிலையில் கொழும்பு நுகர்வோர் விலைக் குறிகாட்டி விலை உயர்வில் உண்மையான செறிவை குறிப்பதாகவில்லை. இக்குறிகாட்டி 12.3 சத வீதத்தைக்கொண்ட குறைவானதோர் விலை உயர்வையே காட்டுகின்றது. உண்மை நியதிகளின்படி நுகர்வோர் பெருமளவிலான விலை அதிகரிப்பை எதிர்நோக்கியதோடு அவர்களிடம் இருந்த பணத்தின் கொள்வனவு ஆற்றலை பெருமளவு குறைத்தது. குறிகாட்டிக்குள் அடக்கப்படாத பலவாக நுகர்வோர் பொருட்கள் அதனுள் அடக்கப்பட்ட பொருட்களின் விலைகளைவிட உயர்ந்து

இருந்தது. பங்கீட்டு முறையின்கீழ் வழங்கப்பட்ட சில பொருட்களின் அளவு போதாமையால் அப்பொருட்கள் பங்கீட்டு முறைக்கு வெளியே அதிகப்படியான விலைக்கே வாங்கக்கூடியதாகவிருந்தது. எனவே, அரிசி, சீனி, மா ஆகிய உணவுப்பொருட்களுக்கு இரண்டுவிதமான விலைமட்டங்கள் நிலவின. மற்றும் மாட்டிறைச்சி போன்ற ஏனைய நுகர்வோர் பொருட்கள் தொடர்பான கட்டுப்பாட்டு விலை எவ்விதத்திலும் செயற்படவில்லை.

இலங்கை பெருமளவு இறக்குமதிகளில் தங்கியிருந்ததன் காரணமாக வெளியுலகில் என்றுமிலாத அளவு நிலவிய பண வீக்க அமுக்கங்களுடன் இந்நாட்டின் பொருளாதாரமும் மிக நெருங்கி இணைந்தது. பன்னாட்டு பண்டச் சந்தைகளில் உணவுப் பொருட்களுக்கும் மூலப் பொருட்களுக்கும் நிலவிய அதிகரித்த விலைகளின் விளைவாகவே இந்நாட்டிலும் இவ்வாண்டில் விலைகள் பெருமளவால் உயர்ந்தன. 1975 சனவரியில் எண்ணெய் உற்பத்தி நாடுகள் தம் எண்ணெயின் விலைகளை ஒரேமுறையிலேயே நான்கு மடங்கிற்கு மேலாக உயர்த்தியது பன்னாட்டுச் சந்தைகளில் நிலவிய உயர் விலைகளுக்கு மேலும் வலியூட்டியது. எண்ணெய் விலை உயர்ந்ததன் காரணமாக கப்பற் கூலி வீதங்கள் உயர்ந்தது மேலும் ஒரு காரணியாகும். அரிசி, மா, சீனி மற்றும் இன்றியமையாத பொருட்கள் பணிகள் ஆகியவற்றில் மிக உயர்ந்த விலைகள் ஏற்பட்டதன் நேரடிக் காரணத்தால் இந்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட பல்வகைப் பொருட்களினதும் விலைகளும் உயர்ந்தன. இவ்விலை உயர்வுகளின் மொத்த விளைவு பண வீக்க அமுக்கங்களுக்கு மேலும் வலிவூட்டி பணவீக்கம் மேலும் உயரக் காரணமாயிருந்தது. இது தயாரிக்கப்பட்ட எல்லா வகைப் பொருட்களினது விலைகளையும் நாட்டின் போக்குவரத்தையும் பாதித்தது.

இன்றியமையாத பொருட்கள், பணிகள் ஆகியவற்றில் ஏற்பட்ட விலை உயர்வுகள் வாழ்க்கைச் செலவை அதிகரித்தன. இவை முறையே கூலிகளை உயர்த்தின. கூலி வீத அதிகரிப்புகளும் உள்ளீடுகளுக்கு ஏற்பட்ட அதிகரித்த விலைகளும் நெல் உற்பத்தியினதும் ஏனைய வேளாண்மை உற்பத்திகளின் செலவையும் பாதித்தன. இறக்குமதிப் பொருட்களுக்கு ஏற்பட்ட ஏறக்குறைய அதே வீத அதிகரிப்பு உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்கள், உணவுப்பொருட்கள், ஆகியவற்றில் ஏற்பட்டதற்கு மேற்குறித்த நிலையே காரணமாகும். மேலும் இலங்கையின் வேளாண்மை உற்பத்தி, இறக்குமதி செய்யப்படும் வளமாக்கி, கிருமிநாசினி, பொறி, இயந்திரம் ஆகியவற்றின் உதிரிப்பாகங்களிலேயே மிகப் பெருமளவு தங்கியிருக்கிறது. மிக உயர்ந்த விளைச்சலைத் தரும் உள்நாட்டு வேளாண்மைப் பயிர்கள் குறிப்பாக, நெல் பெருமளவு இறக்குமதி உள்ளீட்டிலேயே தங்கியிருக்கிறது. உண்மையில், மத்திய வங்கி நடாத்திய காணி, காணிப் பயன்பாடுபற்றிய அளவைகளிலும் மற்றும் ஏனைய அளவைகளிலும் இருந்து பெற்ற தரவின்படி கூலியாட் செலவு குறிப்பாக, நெல்லிலும் மற்றைய வேளாண்மைக் காணிகளில் வேலைக்கு அமர்த்தப்படும் கூலியாட்களுக்கு வழங்கப்படும் செலவு கடந்த இரு ஆண்டுகளாக ஏறக்குறைய 50 சத வீதத்தால் உயர்ந்துள்ளது. 1974 இன் இறுதிக் காலாண்டில் வேளாண்மைத்துறையில் அமர்த்தப்படும் ஒரு ஆண் கூலியாளின் நாளாந்த கூலி உண்மையில் ரூ. 7.38 ஆகவும், உணவுடன் ரூ. 6.37 ஆகவும் விளங்கியது. தீவு முழுவதிலும் இருந்து பெற்ற இச்சராசரி ஒவ்வொரு மாகாணத்தி

லும் நிலவும், மாறுபடும் கூலி வீதங்களை உள்ளடக்கி விளங்குகிறது. கண்டி, மாத்தளை, குருநாகல், பொலன்னறுவை மாவட்டங்களில் உணவு வழங்கப் படாத நாளாந்தக் கூலிகள் சராசரி ரூ. 5.00 ற்கு சிறிது குறைந்திருந்தது. மறுபுறம் கொழும்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், வவுனியா, நுவரெலியா மாவட்டங்களில் நாட் கூலிகள் ரூ. 8.00 தாண்டி விளங்கியது. வாழ்க்கைச் செலவு உயர்ந்ததன் காரணமாக தொழிற் சங்கங்களின் அங்கம் வகித்த தொழிலாள வகுப்பினரும் அரசாங்க ஊழியர்களும் இடர் உதவியைக்கோரி நின்றனர். இதன் விளைவாக 1974 ஏப்பிரலில் அரசாங்க துறையிலும் தனி யார் துறையிலும் பணி புரிந்த சில வகுப்பினர்களின் கூலிகள் கூட்டப் பட்டன.

**விலையை நிர்ணயிக்கும் கொள்கை**

இன்றியமையாத பொருட்களாகிய சீனி, மா, அரிசி ஆகியவற்றை உதவு தொகை வீதங்களில் கிடைக்கத்தக்கதாக செய்வதன் வாயிலாக பணவீக் கத்தை கட்டுப்படுத்தும் வழிமுறையை தனது கொள்கையாக அரசாங்கம் கைக்கொண்டது. இலவசமாக வழங்கப்பட்ட அரைக்கொத்து அரிசிக்குமேலாக வழங்கப்பட்ட பங்கீட்டு அரிசியின் விலைகளும் பங்கீட்டிற்கு வெளியே வழங் கப்பட்ட சீனியின் விலைகளும் உயர்த்தப்பட்டதெனினும் இயன்றளவு ஆகக் குறைந்த மட்டங்களிலேயே இவ்வதிகரிப்புகள் வைக்கப்பட்டன. அரசாங்க நிதிகளில் அதிகரிக்கப்பட்ட உதவுதொகை உண்டியல் ஏற்படுத்தக்கூடிய விளை வுகளை கணக்கில் வைத்தே இம்முடிவு எடுக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக 1974 இல் இலவசமாக வழங்கப்பட்ட அரைக்கொத்தரிசிமட்டுமே ரூ. 9,000 இலட்சத்திற்கு மேற்பட்ட செலவை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியுள்ளது. மறுபுறம், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களாலும் தனியார் துறையினலும் உற்பத்தி செய்யப்பட்ட ஓரளவு இன்றியமையாத பொருட்களிலும், தயாரிக் கப்பட்ட பொருட்களிலும் ஏற்பட்ட அதிகரித்த செலவை நுகர்வோர் தாங் கவேண்டிய நிலை ஏற்படுத்தப்பட்டது. பல கைத்தொழிற் கூட்டுத்தாபனங்க ளும், பணிகள் ஆற்றும் ஏனைய நிறுவனங்களாகிய இ. போ. ச. புகைவண்டி ஆகியவை தம் பொருட்களுக்கும் பணிகளுக்கும் விலைகளை உயர்த்தவேண்டிய கட்டாய நிலைக்கு ஆளாக்கப்பட்டன.

நுகர்வுப் பொருட்களுக்கு வழங்கப்படும் உதவு தொகைகளை இயன்றளவு நீக்கி, வரவு செலவுத் திட்டத்தில் மேலும் தாக்கம் ஏற்படுவதைத் தவிர்க் கவே நடைமுறைக்கு ஏற்ற விலைகளில் நுகர்வோருக்கு பொருட்களை வழங்கும் வழி முறைகள் சென்ருண்டு 1973 ஒற்ரேபரில் மேற்கொள்ளப்பட்டன. 1974 இலும் விலைகளை நிர்ணயிப்பதுபற்றிய அரசின் கொள்கை அடிப்படை யில் ஒன்ருகவே விளங்கியது. எனினும், விலைகளில் ஏற்பட்ட மிகப் பெரும் அதிகரிப்பு காரணமாக ஆகக் கூடிய வெற்றியை அடையும் முறையில் இக் கொள்கைகளை அரசாங்கம் மேலும் தொடர்ந்து கடைப்பிடிக்க முடியவில்லை. விலையை நிர்ணயிக்கும் கொள்கை சீரான முறையில் உருவாக்கப்பட்டபோதும், மொத்த சில்லறை கூட்டுறவுச் சங்கங்களிலேயே வழங்கல் முறைஅளவுக்கு மீறிய நிலையில் தங்கியிருந்ததனல் இன்றியமையாத நுகர்வுப் பொருட்களை வழங்கக் கையாளப்பட்ட ஒழுங்குமுறைகள் நிறைவு தருபவையாக அமைய

வில்லே. சில்லறைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக எல்லாப் பொருட்களேயும் வழங்க முயன்றதனுல் ஒரு சில பொருட்கள்தான் சரியான விலேயில் உண்மை வாங்குநரால் பெறத்தக்கதாய் இருந்தது. கூட்டுறவுகளில் ஆழமாய்ப் பதிந்திருந்த குறைபாடுகள் காரணமாக நியாயமான விலேகளில் சமமான முறையில் பொருட்களே வழங்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் விரும்பியளவு வெற்றியைத் தரவில்லே

(ஈ) சென்மதி நிலுவை

சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கிலுள்ள பணக் குறைதான் இதுகாலவரை நாடு கண்ட ஆகக்கூடிய குறையாகும். முன்பு வலியுறுத்தப்பட்டதற்கமைய பண்டப் பொருட்களின் விலேகளில் ஏற்பட்ட மிகப் பெரிய அதிகரிப்பின் காரணமாக இறக்குமதிகளில் ஏற்பட்ட என்றுமில்லாத அதிகரித்த செலவின் விளேவே இதுவாகும். ஆகக் குறைந்த மட்டங்களுக்கு அடிப்படை இன்றியமையாத பொருட்களின் இறக்குமதி குறைக்கப்பட்ட நிலேயிலும் நடைமுறை ஏற்றுமதி வருவாய்களில் இருந்தும் தோழமை நாடுகளில் இருந்தும் வழமையாக பெற்றுவரும் துணே உதவி நிதியில் இருந்தும்கூட இறக்குமதி உண்டியற் செலவைத் தாங்க முடியவில்லே. உண்மையில் பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட நுகர்வுப் பொருட்களின்மீது விதிக்கப்பட்ட குறைப்பு அண்மை ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட ஆகக் குறைந்த கடும் குறைப்பாகும். தனியாரின் அரிசி, மா ஆகிய தானியநுகர்வு மிகக் குறைந்த மட்டத்தில் நிலவியது. சீனி ஒதுக்கீடு ஆகக் குறைந்தளவிற்கு குறைக்கப்பட்டது. 1973 இல் பங்கீட்டிற்கு வெளியே சீனி கிடைக்கத்தக்கதாய் இருந்தபோது நாட்டின் இறக்குமதி ஏறக்குறைய 193,000 தொன்களாக விளங்கின. 1974 இன் இத்தொகை பெருமளவினுற் குறைக்கப்பட்டு, மொத்தத் தேவைகள் 67,000 தொன்களாக விளங்குகின்றன. 1974 இல் உலகச் சந்தையில் சீனிக்கிருந்த வியப்புக்குரிய உயர் விலேயில் முந்திய மட்டங்களில் இறக்குமதி செய்ததுபோல் சீனியை இறக்குமதி செய்ய இந்நாட்டிற்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணி மூலங்கள் இருந்திருக்க முடியாது.

1974 இல் இறக்குமதிகளின் அளவு குறைக்கப்பட்டது. இறக்குமதி வாயிலாக ஏற்படக்கூடிய பண வீக்கத்தின் அளவை ஏற்ற முறை எடுத்துக்காட்டுகிறது. இவ்வாண்டின்போது ஏற்றுமதிகளுக்கு நல்ல விலே கிடைத்தபோதும் இந்நாட்டின் இறக்குமதி ஆற்றலே கணிசமானளவு இப்பண வீக்கம் குறைத்துள்ளது. இறக்குமதி விலேகள் மேலும் உயர்ந்து சென்றதின் காரணமாக இறக்குமதிகளேக் குறைப்பதனேத் தவிர வேறு வழி அரசாங்கத்திற்கு இருக்கவில்லே. பொருட்கள் வழங்கலே கூட்டுவதற்குத் துணே செய்யும் முறையில் இறக்குமதிகளின் மட்டத்தினே அதிகரிப்பதற்கு வாய்ப்பாக சென்மதி நிலுவையின் நிலே அமையவில்லே.

நாட்டின் மொத்த வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் 1974 ஆம் ஆண்டில் அதிகரித்தன. சென்ற ஆண்டின் ரூ. 6500 இலட்சத்திற்கு எதிராக இவ்வாண்டு நாட்டின் சொத்துக்கள் ஏறக்குறைய சராசரி ரூ. 9,500 இலட்சமாக விளங்கி ஆண்டின் இறுதி நான்கு மாதங்களில் ரூ. 10,000 இலட்ச இலக்கை

யும் தாண்டி விளங்கியது. இது நாட்டின் உண்மைச் சென்மதி நிலுவை நிலையை ஓரளவு பிழையாகவே படம் பிடித்துக் காட்டுகிறதுபோலும். பெருமளவில் விளங்கிய இறக்குமதி உண்டியல்களுக்கு ஈடுகொடுக்க தொழிற்படும் நிலுவைகள் வடிவில் இருப்புச் சொத்துக்களின் ஒதுக்கு போதியளவாய் இருக்கும் முறையில் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் அதிகரிக்கவிடப்பட்டன. 1974 இல் வியப்புத்தரும் உயர் மட்டங்களில் இறக்குமதி விலைகள் விளங்கிய தனுல் கணிசமானளவு குறைக்கப்பட்ட வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் கொண்டு நாடு தன் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க முடியாது. ஆகவே, உயர்ந்து சென்ற இறக்குமதி விலைகளுக்கு ஈடு கொடுக்கும் முறையில் வெளிநாட்டு நிலுவைகள் வடிவில் செலவு செய்யத்தக்க வெளிநாட்டுச் செலாவணியின் மொத்த அதிகரிப்புக்குத் தேவையிருந்தது. மேலும் திரம்பலர் சொடுகடன் மாற்று வீதம் அடிப்படையில் அரிசி, மா, சீனி ஆகியவை கொள்வனவு செய்யப்பட்டதினுல் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளில் உடனடிக் கட்டணங்கள் செலுத்தவேண்டிய தேவையிருக்கவில்லை. 1974 இல் நிலவிய உயர் விலைகளுக்கேற்ப இவ்வாண்டின் வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் சராசரி மட்டம் ஏறக்குறைய இரண்டுமாத இறக்குமதிகளுக்கே போதியதாய் இருந்திருக்கும். ஒப்புநோக்குகையில் சென்ற இரு ஆண்டுகளுக்கும் இதே மட்ட வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள் ஏறக்குறைய நான்கு மாத இறக்குமதித் தேவைகளுக்கு போதியதாய் அமைந்திருக்கக்கூடும்

**வெளிநாட்டுப் பொறுப்புக்கள்**

அண்மை ஆண்டுகளில் ஏற்பட்ட வெளிநாட்டுக் கொடுகடன் கொடுக்கல் வாங்கல்கள் இலங்கையின் மொத்தக் கடனைப் படிப்படியாக உயர்த்தியுள்ளது. பொதுப்படுகடனின் உள்நாட்டு வெளிநாட்டு உள்ளடக்கம் மிகப் பெருமளவால் அதிகரித்துள்ளது. மொத்த வெளிநாட்டுக் கடனைப் பொறுத்த வரையில் 1970 இல் ரூ. 15,964 இலட்சமாகவிருந்து, 1974 இல் ரூ. 29.264 இலட்சமாக உயர்ந்துள்ளது. எனவே நாலு ஆண்டுகளுக்கிடையே பொதுப்படுகடன் ஏறக்குறைய இரட்டிப்பாகப் பெருகியுள்ளது. 1965 இல் இருந்த மொத்த வெளிநாட்டுக் கடன் மட்டமாகிய ரூ. 4,728 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் இப்பொழுது இருக்கும் மட்டம் 500 சத வீதத்திற்கு மேற்பட்ட அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது, எனினும். உள்நாட்டுக் கடன் ஓரளவு குறைவாக 1970 இல் ரூ. 63,071 இலட்சமாகவிருந்து, 1974 இல் ரூ. 94,066 இலட்சமாக 40 சத வீதத்தால் உயர்ந்துள்ளது. வெளிநாட்டு உள்நாட்டு உள்ளிருப்புகளை அடக்கி 1974 முடிவில் ரூ. 123330 இலட்சமாக விளங்கும் மொத்தப் பொதுப்படுகடன் கடந்த சில ஆண்டுகளாக அரசாங்கம் ஏற்பட்ட குறுங்காலப் பொறுப்புக்களை பிரதிபலிக்கவில்லை. ஆண்டு முடிவிலும் தொடர்பான எண் தொகைகளுடன் இவையும் கூட்டப்படின் 1973 இன் மொத்தக் கடன் ரூ. 10000 இலட்சத்தாலும் 1974 இன் மொத்தக் கடன் ரூ. 12000 இலட்சத்தாலும் உயரும்.

1974 இன் ஆகக் கவலைதரும் பண்பு யாதெனில் சென்மதி நிலுவைக் காரணங்களுக்காக அதிகரித்த வீதத்தில் குறுங்கால வெளிநாட்டுப் பொறுப்புக்கள் பெறப்பட்டதேயாகும். அட்டவணை 1 – 5 காட்டப்பட்டவாறு, இவ்

Central Bank of Sri Lanka
22645
10 JUN 2009
LIBRARY & INFORMATION
Communications Department



வாண்டின்போது, இறக்குமதிகளுக்குக் குறிப்பாக, உணவுப்பொருட்களுக்கு ரூ. 4000 இலட்சம் கொண்ட விரைவில் முதிர்ச்சியுறும் குறுங்காலப் பொறுப்புகளும் வங்கிக் கடன்பாடுகளும் பயன்படுத்தப்பட்டன.

அட்டவணை I – 5

**வெளிநாட்டுப் பொறுப்புக்களின் சில வகுப்புக்கள்**

| | 1971 | 1972 | 1973 | 1974 |
|---|---|---|---|---|
| **குறுங்காலக் கொடுகடன்** | | | | |
| வெளிநின்ற தொகை (ப. இ. ரூ.) | 250.4 | 290.0 | 444.8 | 492.1 |
| முதிர்ச்சிக் காலம் ... ... | ஓராண்டுக்கு குறைவாக | ஓராண்டுக்கு குறைவாக | ஓராண்டுக்கு குறைவாக | ஓராண்டுக்கு குறைவாக |
| **வழங்குனர் கொடுகடன்** | | | | |
| வெளிநின்ற தொகை (ப, இ. ரூ.) | 74.6 | 94.0 | 329.0 | 517.8 |
| முதிர்ச்சிக் காலம் ... | 1–10 ஆண்டுகள் | 1–10 ஆண்டுகள் | 1–10 ஆண்டுகள் | 1–10 ஆண்டுகள் |
| வட்டி விகிதம் (ஆண்டு ஒன்றிற்கு) | 6—8% | 6—8% | 7—12% | 9—14% |
| **வெளிநாட்டு வங்கிகளின் கடன்பாடுகள்** | | | | |
| வெளிநின்ற தொகை (ப. இ. ரூ.) ... | 333.8 | 352.2 | 245.2 | 261.9 |
| முதிர்ச்சிக் காலம் ... ... | 1–3 ஆண்டுகள் | 1–3 ஆண்டுகள் | 1–3 ஆண்டுகள் | 1–3 ஆண்டுகள் |
| வட்டி விகிதம் ... .. | 7½—9% | 7½—9% | 8—14% | 9—14% |

அட்டவணை 1 - 5 கடந்த சில ஆண்டுகளின் முதிர்ச்சி, வட்டிவீதம் ஆகிய அடிப்படையில் அமைந்துள்ள சில வெளிநாட்டுப் பொறுப்புக்களின் வகைகளின் விவரங்களைத் தருகின்றது. 1971 இன்றுக்கும் 1974 க்குமிடையில் குறுங்காலக் கொடுகடன்கள் ரூ. 2504 இலட்சத்தினின்று ரூ. 4901 இலட்சமாக ஏறக்குறைய இரண்டு மடங்கால் பெருகியுள்ளது. அதேவேளையில், வழங்குநர்கள் கொடுகடன்கள் 1971 இல் ரூ. 746 இலட்சமாகவிருந்து 1974 இல் ரூ. 5096 இலட்சத்திற்கு ஆறு மடங்கால் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன்பாடுகள் ஓரளவு குறைந்துள்ளதெனினும், 1973 இல் இருந்து உயர்ந்ததனைத் தொடங்கி, ரூ. 2611 இலட்சங் கொண்ட ஓரளவு உயர் மட்டத்தினுல் தொடர்ந்து விளங்கியது. நாடுபெற்ற இந்தக் குறுகிய காலக் கொடுகடன்களுக்கு கொடுக்கவேண்டிய உயர் வட்டி வீதங்கள் பன்னுட்டு நாணய நிலயங்களில் வெளிநாட்டு ஒதுக்குகளை குறுங்கால அடிப்படையில் முதலீடு செய்து பெற்ற அதேயளவு உயர் வருவாய்களினுல், ஓரளவு எதிரீடு செய்தது.

ஆண்டின்போது ஏற்பட்ட கொடுப்பனவு இடர்ப்பாடுகளைக் குறைக்கவும், இன்றியமையா்த உணவுப்பொருட்கள், மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் ஆகியவற்றை ஆகக் குறைந்த தேவைகள் என்ற அடிப்படையில் பெறுவதற்கு குறுங்காலக் கடன்பாடுகள் பெருமளவு துணைசெய்வதெனினும், விரைவில் இவை பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக்கூடும். அட்டவணை 1 - 5இல் காட்டப்பட்டவாறு இக்குறுங்காலக் கொடுகடனின் பெரும்பகுதி வரும் ஆண்டிற்கிடையில் முதிர்ச்சியடையயிருக்கின்றது. மீளக் கொடுக்கும் கடப்பாடு

களை நிறைவுசெய்ய போதிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை விரைவில் தோற்றுவிக்கும் நிலையில் நாடு விளங்கவேண்டும். தேயிலை நீங்கலாக ஏனைய பெருந்தோட்டப் பயிர்களின் வருவாயில் வீழ்ச்சியேற்பட்டிருப்பதன் காரணமாக நாட்டின் இறக்குமதி ஆற்றல் மேலும் வீழ்ச்சியுறும் நிலையை இலங்கை உடனடியாக எதிர்நோக்கவேண்டியிருக்கிறது. இவ்விடயம் இவ்வுரையில் முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய சூழ்நிலையில் மரபுவழி ஏற்றுமதிக் கைத்தொழில்களில் உற்பத்தியைப் பெருக்கினுற்ருன் ஏற்றுமதி வருவாய்களை எளிதில் கூட்டமுடியும். வெளிநாட்டு ஏற்றுமதிச் சந்தைகளில் மரபு வழியல்லாப் பொருட்களை விற்பதற்குத் தேவையான ஏற்றுமதி ஊக்கம், விரிந்த அடிப்படையிலான உள்ளமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் ஆகியவை எதுவும் இன்றி, தேயிலை றப்பர், தேங்காய் போன்ற பொருட்களினை கூடியளவு விற்பனை செய்யலாம். ஆனல் மரபு வழியல்லா ஏற்றுமதிகள் இரத்தினக்கல் நீங்கலாக, சுற்றுலா கைத்தொழிற் பொருட்கள் ஆகியவை கணிசமானளவு தேறிய வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டுவரப்போவதில்லை. இவ்விதம் யாம் கூறுவதற்குக் காரணம் இக் கைத்தொழில்களின் உற்பத்தியில் அடங்கியுள்ள பெருமளவிலான இறக்குமதி உள்ளடக்கமேயாகும். மேலும் உணவுப்பொருட்கள், மூலப் பொருட்கள் மற்றும் ஏனைய இன்றியமையாத பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிகள் மிகக் கடுமையாகக் குறைக்கப்பட்டிருப்பதனுல் இன்னும் இத்தகைய பண்டங்களை இறக்குமதி செய்வதைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. உணவில் தானிய உள்ளடக்கத்தை மேலும் குறைப்பது மக்களின் உடல்நலனுக்கு ஊறுய் அமையும். மேலெழுந்து செல்லும் மக்கட் தொகையின் இறக்குமதித் தேவைகளுக்கேற்ப இறக்குமதி ஆற்றலும் படிப்படியாக உயர்த்தப்படவேண்டும். இக்காரணங்கள் ஒருபுறமிருக்க பண வீக்கம் தொடர்ந்து நிலவும் இச்சூழ்நிலையில் விலைகளை நிலையாக வைத்திருக்கப் பல பொருட்களை இறக்குமதி செய்யவேண்டிய தேவையிருக்கிறது. மேற்குறித்த விடயங்களை நினைவிற்கொண்டு பார்க்கையில், இக்கொடுகடன்களை மீளப் பெறும் முறையில் முடிவுருத அடிப்படையில் மேலும் கூடியளவில் குறுங்காலக் கொடுகடன்கள் கிடைக்கத்தக்கதாய் இல்லாவிடின் குறுங்காலப் பொறுப்புக்களைத் தீர்ப்பதில் கணிசமானளவு இடர்ப்பாடுகளைக் கட்டாயம், நாடு தாங்கவேண்டிய நிலை ஏற்படும். கடன்களைத் தீர்ப்பதற்கும், இறக்குமதி ஆற்றல் வீழ்ச்சியுறும் இச்சூழ்நிலையில் இன்றுள்ள இறக்குமதி மட்டத்தைப் பேணி உறுதிப்படுத்தவும் இறுதியில் குறிக்கப்பட்ட கொடுகடன் அதிகரித்த நிலையில் எமக்குத் தேவைப்படுகிறது.

இன்றுள்ள சூழ்நிலையில் எமக்கு ஆறுதல் அளிக்கும் செய்தி யாதெனில் உலகச் சந்தைகளில் இன்றியமையாத உணவுப் பொருட்களாகிய மா, சீனி, மூலப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகள் ஓரளவு விரைவில் வீழ்ச்சியுற்று வருவதேயாகும். அதேவேளையில் பண்டச் சந்தைகளில் ஏற்பட்டுள்ள இவ்விலை வீழ்ச்சி, இலங்கையின் முக்கிய மரபுவழி ஏற்றுமதிகளைப் பெருமளவு பாதிக்காது என்பதற்கு எத்தகைய உறுதிப்பாடும் இல்லை. இந்நிலை ஏற்கனவே இறப்பருக்கும் ஓரளவு தேங்காய்க்கும் ஏற்பட்டுள்ளது. முடியுமெனில் குறுங்காலக் கொடுகடன்கள் தொடர்ந்து கிடைக்காத நிலையில் எளிதாகத் திருப்பிக் கொடுக்கும் முறையில் நீண்டகாலக் கடன்களாக இக்குறுங்காலக் கொடு

கடன்கள் மாற்றியமைக்கப்படவேண்டும். இது இயலாதெனின் இன்னும் சில ஆண்டுகளில் சென்மதி நிலுவையில் தாங்க முடியாத நலிவை இவை ஏற்படுத்தியே தீரும். வெளிநாட்டுக் கடனை நல்லமுறையில் நிர்வகித்தல் என்ற கண்கொண்டு பார்க்கையில் எமக்கு ஒரு சார்பான சூழ்நிலையும் இருப்பின் 1974 இல் எமக்குக் கிடைக்கத்தக்கதாய் இருந்த குறுங்காலப் பொறுப்புக்கள் போன்றவற்றைத் தவிர்ப்பதே நலமாய் இருக்கும். வருங்காலத்தில் அரிசி, சீனி ஆகிய இன்றியமையாத வேளாண்மை உற்பத்திகளைப் பெருக்கும் முறையில் அடிப்படையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சி எடுத்தாற்றான் யாம் குறித்த கொள்கையில் வெற்றிகாண முடியும்.

(ஊ) உற்பத்தி

உள்நாட்டு உற்பத்தி

சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1974இல் நெல் உற்பத்தி பெருமளவால் அதிகரித்திருப்பதை குடித்தொகை புள்ளி விவரத் திணைக் களம் தயாரித்த புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. வெளியீடு 1973 இல் 629 இலட்சம் புசல்களாக விளங்கி, 1974 இல் 768 இலட்சம் புசல்களாக 22 சத வீதத்தால் அதிகரித்தது. இத்தகைய அதிகரித்த உற்பத்திக்கு பயிரிடப்பட்ட எல்லைப் பரப்பின் அதிகரிப்பும், ஏறக்குறைய 20 சத வீத குறைந்தளவு பயிர்ச் செய்கை இழப்புமே காரணமாகும். மேலும், நெற் செய்கைக்கு வழங்கப் பட்ட வளமாக்கி 20 சத வீதத்தினுல் அதிகரிக்கப்பட்டது. அதேவேளையில் அதிகரித்த உற்பத்திச் செலவு காரணமாகக் கொடுகடன் உச்ச வரம்புகள் 285 சத வீதத்தால் மேலெழுந்த நிலையில் திருத்தப்பட்டது. 1970 இற்குப் பின் 1974 விலேயே நெல் உற்பத்தியின் மட்டம் உயர்ந்து விளங்கியது. ஆனுல் ஓர் ஏக்கரில் விளைச்சல் 1969 / 70 இல் 52.51 புசல்களாக விளங்க, 1973 / 74 இல் 45.66 புசல்களாக வீழ்ச்சியுற்றது.

1974 இல் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட இப்பெரும் அதிகரிப்பு உற்பத்தி மாவட்டங்களில் நெல்லுக்கும் அரிசிக்கும் ஏற்பட்ட அதிகரித்த விலைகளின் அடிப்படையிலும் அரிசி பங்கீட்டிற்கும் பங்கீட்டிற்கு வெளியேயும் (வெளிச் சந்தை) விற்கப்பட்ட விலை, வழங்கப்பட்ட கிடைக்கத்தக்க தன்மை ஆகிய வற்றின் அடிப்படையிலுமேயே கணிக்கப்படவேண்டும். அண்மையில் மத்திய வங்கியினுல் நடாத்தப்பட்ட அளவைகளினுல் சேகரிக்கப்பட்ட தரவில் இருந்து பார்க்கையில் முன்பு என்றுமில்லாத முறையில் 1974 முழுதும் வெளிச்சந் தையில் நெல் விற்பனையின் விலை மிக உயர் மட்டத்தில் விளங்கியது. 1974 இன் இரண்டாம் அரை ஆண்டில் நெல்லின் உத்தரவாத விலை ஒரு புசல் ரூ. 33 என்று இருக்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வெளிச் சந் தையில் ரூ. 39 ஆகவும் கொழும்பு, களுத்துறை மாவட்டங்களில் ரூ. 53 ஆகவும் விளங்கியது. தீவு முழுதும் ஒரு புசலின் சராசரி விலை ரூ. 49 ஆக விளங்கியது. இதுபோலவே அம்பாறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் வெளிச் சந்தையில் ஒரு கொத்தரிசி 3/70 ஆகவும், யாழ்ப்பாண மாவட்டத் தில் 7/25 ஆகவும் விற்கப்பட்டது. ஒரு கொத்தரிசி நாடு முழுதும் நிலவிய சராசரி ரூ. 4/46 ஆகும். உயர்ந்த உத்தரவாத விலைத் திட்டத்தின் காரண மாக உள்நாட்டு உற்பத்தி கணிசமானளவு அதிகரித்திருக்கையில் உள்ளீடுக

ளின் அதிகரித்த விலைகள், குறிப்பாக வளமாக்கியில் நிலவிய உயர்ந்த விலைகள் காரணமாக உற்பத்திச் செலவும் பெருமளவால் உயர்ந்தது. 1974/75இல் பெரும்போகம் தொடங்கியபோது வளமாக்கியின் உயர் விலை காரணமாகவும் வரட்சி காரணமாகவும் வளமாக்கி பயன்படுத்தப்பட்ட அளவு கணிசமான அளவு வீழ்ச்சியுற்றது. இதன் விளைவாக வளமாக்கிக் கூட்டுத்தாபனத்தின் கிட்டங்கிகளில் வளமாக்கி குவியத் தொடங்கின.

1973/74 ல் நெல்லின் மொத்த உற்பத்தி 768 இலட்சமாக விளங்கியது. விதை நெல்லுக்கும் கழிவிற்கும் ஒரு பகுதியை ஒதுக்கின. 929000 தொன் கொண்ட அரிசி கிடைக்கப்பெற்றமை காட்டுகிறது. இந்த அடிப்படையில் நோக்குகையில் 1970 நீங்கலாக 1974 லேயே உள்ளூர் உற்பத்திவாயிலாக ஆகக் கூடிய அரிசி கிடைக்கத்தக்கதாய் இருந்தது. பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்ட அரிசி குறைக்கப்பட்ட நிலையிலும் 1974 இல் உள்நாட்டு உற்பத்தி கூடிய நிலையிலும் 1972, 1973 ஆண்டுகளின் இறக்குமதி மட்டங்களிலும் பார்க்கக்கூடிய நிலையில் 297000 தொன்கள்கொண்ட அரிசி இறக்குமதி செய்யப்பட்டது பங்கீட்டு அடிப்படையில் தனி ஆளுக்கு வழங்கப்பட்ட குறைந்தளவு அரிசி 1973 இல் தனியாளுக்கு ஒரு கிழமைக்கு 2.18 இருத்தல் என்ற நிலையில் இருந்து 1974 இல் தனியாளுக்கு ஒரு கிழமைக்கு 1.77 இருத்தல்களாக வீழ்ச்சியுற்றது. அட்டவணை 1 - 6 காட்டப்பட்டவாறு சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1974 இல் தனியாருக்கு கிடைக்கத்தக்க அரிசி குறைவுற்றிருந்தது. உள்நாட்டு உற்பத்தி மிக உயர்ந்த மட்டத்திற்கு உயர்ந்த நிலையிலும் அரிசியின் வெளிச்சந்தை விலை உயர்ந்து விளங்கியது. இவ்விதம் உயர்ந்ததற்குக் காரணம், 1973 திசெம்பரில் பங்கீட்டிற்கு வழங்கப்பட்ட ஒரு கொத்தரிசி ரூ. 1/- இருந்து 1974 இல் ஒரு கொத்தின் சராசரி விலை

அட்டவணை I – 6

**பங்கீட்டுமுறையில் தனி ஆளுக்கு கிடைக்கத்தக்க தானியங்கள்**

| ஆண்டு (1) | மத்திய ஆண்டு குடித் தொகை ('000) (2) | பங்கீட்டு முறையில் கொடுக்கப்பட்ட அரிசியின் மொத்த அளவு ('000 தொன்கள்) (3) | பங்கீட்டு முறையில் தனி ஆளுக்கு ஒரு கிழமைக்கு கிடைக்கத்தக்க அரிசி (இருத்தல்கள்) (4) = (3) — (2) | கிடைக்கத்தக்க மாவின் முழு அளவு ('000 தொன்கள்) (5) | தனிஆளுக்கு ஒரு கிழமைக்கு கிடைக்கத்தக்க மாவின் அளவு (இருத்தல்.) (6) = (5) — (2) | தனி ஆளுக்கு ஒரு கிழமைக்கு கிடைத்தக்க மாவின் அளவு (இருத்தல்கள்) (7) = (4) + (6) |
|---|---|---|---|---|---|---|
| 1968 .. | 11,992 | 505 | 1.81 | 422 | 1.51 | 3.32 |
| 1969 .. | 12,252 | 542 | 1.90 | 440 | 1.54 | 3.44 |
| 1970 .. | 12,514 | 532 | 1.83 | 381 | 1.30 | 3.13 |
| 1971 .. | 12,768 | 925 | 3.12 | 370 | 1.24 | 4.36 |
| 1972 ... | 13,020 | 10181 | 2.731 | 5311 | 1.53 | 4.26 |
| 1973 ... | 13,249 | 673 | 2.18 | 462 | 1.50 | 3.68 |
| 1974 ... | 13,393 | 553 | 1.77 | 419 | 1.34 | 3.11 |

குறிப்பு: எல்லா எண்தொகைகளும் நிதி ஆண்டு அடிப்படையில் தரப்பட்டுள்ளன. எவ்வாறுயினும் 1973ம், 1974ம் ஆண்டிற்குரிய எண்தொகைகள் கலண்டர் ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

ரூ. 1/15 ஆக உயர்த்தப்பட்டது. மறுபுறம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு புசல் நெல்லின் உத்தரவாத விலை ரூ. 33 ஆக உயர்த்தப்பட்டது. இதற்கு மேலாக ஒரு இருத்தல் ரூ. 1.34 என்ற அடிப்படையில் தனியாருக்கு கிடைக்கத்தக்க மாவின் அளவு 1970, 1971 ஆம் ஆண்டுகளைவிட கூடியதாக இருந்ததெனினும், சென்ற இரு ஆண்டுகளைவிட குறைவுடையதாகவே இருந்தது. 1974 இல் கிடைக்கத்தக்க மொத்தத் தானியங்களின் அளவு ஒரு ஆளுக்கு ஒரு கிழமைக்கு 3.11 இருத்தல்களாக விளங்கியது. 1973 இல் 3.68 இருத்தல்கள் கிடைக்கத்தக்கதாய் இருந்ததை ஒப்பிடுகையில் இது 16 சத வீதம் குறைவுடையதாகும். 1972 இன் விலை மட்டத்துடன் ஒப்பிடுகையில் 1974 இல் வெளிச் சந்தையில் விற்கப்பட்ட அரிசியின் விலை 300 சத வீதம் அதிகரித்திருந்தது.

**நெல் சந்தைப்படுத்தல்**

அரிசியின் பற்றுக்குறையும் 1974 இல் நிலவிய உயர் விலையும் கிடைக்கத்தக்க நிரம்பல்களை சம அடிப்படையில் வழங்கவேண்டும் என்ற அரசாங்க கொள்கையும் நெற் சந்தைப்படுத்தும் சபையின் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளது. நெற் சந்தைப்படுத்தும் சபை 1972 இன் முதற் பகுதியிலேயே தொழிற்படத் தொடங்கியது. எனினும், நெல்லை வெளியேற்றும் தனி உள்ளூர் அமைப்பாகவே அது கருதப்பட்டது. தனியாட்கள் பெருமளவில் அரிசியையோ நெல்லையோ ஏற்றியிறக்கக்கூடாது என்று சட்ட ஒழுங்கு விதிகள் கொண்டுவரப்பட்டதையடுத்து, 1974 பெப்புருவரியில் நெல்லைக் கொள்வனவு செய்யும் தனியுரிமை பெற்ற நிறுவனமாக இது முக்கியத்துவம் பெற்றது. 1974 பெப்புருவரியில் அனுமதிச் சீட்டின்றி நெல்லையோ அரிசியையோ கொண்டுசெல்லல் தடுக்கப்பட்டது. அதேவேளையில் உற்பத்தியாளர் உற்பத்தி செய்த தொகையையே இருப்பில் வைத்திருக்கலாம் என்றும், நெல் சந்தைப்படுத்தும் சபையின் தமக்கருகிலுள்ள கொள்வனவு நிலையத்துடன் மட்டுமே தம் நெல் அல்லது அரிசி விற்பனையை வைத்திருக்கவேண்டும் என்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. உத்தரவாத விலைக்கும் வெளிச்சந்தை விலைக்குமிடையில் அதிகரித்த விலை வேறுபாடுகள் நிலவியதோடு கள்ளச்சந்தையை பெருமளவு நெல் சென்றடைவதற்கு தூண்டுதலாக வெளிச்சந்தை விலைகள் அமைந்திருந்ததே இந்த ஒழுங்கு விதிகள் பிறப்பிக்கப்பட்டதற்குக் காரணமாய் இருந்தது.

1974 இல் இவ்வொழுங்கு விதிகள் நடைமுறைக்கு வந்தபோதும் 1973/74 பயிர்ச் செய்கையில் 208 இலட்சம் புசல்கள் அல்லது 27.2 சத வீதத்தை மட்டுமே நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்ய முடிந்தது. சென்ற ஆண்டில் தானியத்தின் அளவு 16 சதவீதம் அதிகரித்த நிலையில் ஒரு ஆளுக்கு ஒரு கிழமைக்கு 3.71 இருத்தல்கள் வழங்கப்பட்ட நிலையில் 36 சதவீத நெல் நெற் சந்தைப்படுத்தும் சபையின் ஊடாக அனுப்பப்பட்டது. பெப்புருவரியில் நடைமுறைக்கு வந்த ஒழுங்குவிதிகள் நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு அன்று உதவியாக நிற்காத ஒரு சூழ்நிலையில் ஒரு புசலின் உத்தரவாத விலை ரூ. 18 இற்கும் ரூ. 25 இற்கும் இடையில் வேறுபட்டுக் கொண்டிருந்த வேளையில் மேற்குறித்த நிலை நிலவியது என்பது குறிப்பிடத்தக்கது. குடும்பத்

தின் நுகர்வு அதிகரித்ததன் காரணமாக விற்பனைக்குரிய நெல்லின் அளவு சுருங்கியதே நெற் சந்தைப்படுத்தும் சபை குறைந்தளவில் நெல்லைக் கொள் வனவு செய்வதற்கு ஓரளவு காரணமாக இருக்கலாம். அம்பாந்தோட்டை கண்டி மாவட்டத்தில் நடாத்தப்பட்ட அளவையின் தரவின்படி ஒரு உழவன் தன் வீட்டு நுகர்விற்காகவும் விதை நெல் தேவைக்காகவும் தான் உற்பத்தி செய்த நெல்லின் சராசரி 37 சதவீதம் தொடங்கி 47 சதவீதம் வரை வீட்டில் வைத்திருப்பது வழக்கம் என்பது தெரியவந்துள்ளது. எனினும், 1973/74 உற்பத்தியில் 27 சதவீதத்தை மட்டுமே நெற் சந்தைப்படுத்தும் சபை கொள் வனவு செய்துள்ளது. இது எம்மிடையே ஒரு கேள்வியைத் தோற்றுவித்துள்ளது. அதாவது பங்கீட்டு அடிப்படையில் கிடைக்கத்தக்க அளவுகள் குறைக் கப்பட்டதும் அத்துடன் கிடைக்கத்தக்க தானியங்களின் மொத்த அளவு குறைக்கப்பட்டதும் மட்டுமே ஒரு ஆண்டில் ஒரு கமக்காரக் குடும்பத்தின் தேவைகளை 25 சதவீதத்தால் அல்லது அதற்குக் கூடிய அளவால் அதிகரிக்கச் செய்துள்ளதா என்பதேயாகும். சென்ற ஆண்டு 36.4 சதவீதம் நெல்லை நெற் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்திருக்கையில் மிகப் பெரு விளைச்சல் ஏற்பட்ட 1974 இல் 27 சதவீதத்தை மட்டுமேதான் நெற் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்துள்ளதென்பது மிகக் கவனமாக மீளாய்வுக்கு எடுக் கப்பட வேண்டியதாகும். நெற் கொள்வனவு செய்வதையொட்டி தனி முழு உரிமை வழங்கப்பட்ட நிலையில் சபையின் கொள்வனவு படிப்படியாக வீழ்ச்சி யுற்றது. பங்கீட்டரிசியின் அளவு குறைக்கப்பட்டதன் காரணமாக, நிலவிய புறநடைச் சூழ்நிலையின் விளைவாக 1974 இல் நெற் கொள்வனவின் மட்டம் குறைந்ததெனக் கூறுவதற்கில்லை. இவ்வித வீழ்ச்சி ஏற்பட்டது 1974 ஆம் ஆண்டிற்கு மட்டும் உரியதல்ல. அதேவேளையில் உற்பத்தியாளருக்கு அதிக ரித்த நுகர்வுத் தேவைகள் இருந்த நிலையிலும் 1973 ஒற்றோபரில் நெல்லின் உத்தரவாத விலை ரூ. 25 இல் இருந்து ரூ. 33 ஆக மிகப் பெருமளவில் உயர்த்தப்பட்டமை நெற் சந்தைப்படுத்தும் சபை பெருந்தொகையாக நெல் லைக் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும்.

மாவட்டத்தில் இருந்து மாவட்டத்திற்குப் பெருமளவில் நெல்லைக் கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்ட தடைகள் நெல் விளைச்சல் இல்லாத பகுதிகளில் நெல்லின் விலை மிக உயர்வதற்கும் பற்றுக்குறை தோன்றுவதற்கும் காரண மாய் இருந்ததென்பதற்கும் சான்றுண்டு. உற்பத்தி புள்ளி விவரங்கள் காட் டுவதைப்போல கிடைக்கத்தக்க அரிசியின் மட்டம் இருந்திருப்பதோடு, அரி சியை இடத்திற்கு இடம் கொண்டுசெல்வதற்கு தடையும் இல்லாதிருந்திருப் பின் விலைகளில் முன்னர் சுட்டிக்காட்டிய மிகப் பெரிய வேறுபாடுகள் இல் லாதிருக்கும் என்பதற்கும் ஐயமில்லை. வழங்கல், கேள்வி ஆகியவற்றின் தடை யற்ற செயலாக்கம் நெல், அரிசி ஆகியவற்றின் விலைகளைக் குறைப்பதற்கு உதவுவதுடன் தீவெங்கும் நெல், அரிசி ஆகியவற்றை சிறப்பான முறையில் வழங்குவதற்கு வகை செய்திருக்கும். போக்குவரத்தின்மீது விதிக்கப்பட்ட தடை எவ்விதத்திலும் வெளிச்சந்தையில் நிலவிய நெல்வின் விலையைக் குறைப் பதற்கு உதவவில்லை. நெல்லின் விலை எல்லாப் பகுதிகளிலும் உத்தரவாத விலையைவிட உயர்ந்தே விளங்கியது. வெளிச்சந்தை விலைகள் உத்தரவாத விலையாகிய ரூ. 33 இலும் பார்க்க மேலாக இருக்கும்வரை ஒழுங்கு விதிக ளால் வெளிச்சந்தையில் நெல் விற்கப்படுவதனைத் தடைசெய்து வெற்றிகாண முடியாது.

**பெருந்தோட்டப் பயிர்கள்**

உள்நாட்டு வேளாண்மையின் நிறைவிற்குரிய முழு அளவிலான தொழிற் பாடுகட்கு மாருக பெருந்தோட்டக் கைத்தொழில்களின் தொழிற்பாடுகள் திருப்தியற்றனவாகக் காணப்படுகின்றன. அட்டவணை 1 — 7 இற் கொடுக்கப் பட்டுள்ள எண்தொகைகள் தேயிலை, இறப்பர், தெங்கு என்பனவற்றின் உற் பத்தியில் படிப்படியான வீழ்ச்சியினைக் காட்டுகின்றன. தேயிலையைப் பொறுத்து, 1965 இன் உச்ச நிலை உற்பத்தி எண்தொகையான 5,030 இலட்சம் இருத் தல்களிலிருந்து 1974 இல் உற்பத்தி 4,490 இலட்சம் இருத்தலிற்கு வீழ்ச்சியுற் றது. 1971 வரை சராசரி மட்ட உற்பத்தி 4,800 இலட்ச இருத்தல்களாக அமைய கடந்த மூன்ருண்டுகளில் இது 4500 இலட்ச இருத்தலிற்கு வீழ்ந்தது. உற்பத்தி மேலும் தொடர்ந்து வீழ்ச்சியடையலாம் என்ற, பொதுப்படையாக அறிகுறிகள் தென்படுகின்றன. உற்பத்தியின் 1965 இன் ரூ. 12,100 இலட் சத்திலிருந்து 1974 இல் ரூ. 13,600 இலட்சம் வீழ்ச்சியின் நிலையிலும், தேயிலை யின் ரூபாய் ஏற்றுமதி வருவாய்கள் படிப்படியான அளவில் உயர்ந்திருந்ததா லும், சிறப்பு எடுப்பு உரிமைகளின் சமமான வெளிநாட்டுச் செலாவணி வரு வாய்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி தெரிகிறது. இது 1965 இன் சி. எ. 2,030 இலட்சத்திலிருந்து 1974 இல் சி. எ. 1,689 இலட்சத்திற்கு குறிப்பிடத்தக்க முறையில் வீழ்ச்சியுற்றமையிலிருந்து தெளிவாகின்றது. இவ் ஆண்டில் தேயிலைக் குச் சார்பான விலைகள் இருந்தும், இது நிகழ்ந்தது எனின், பல காரணிகட்கிடை யில், கடந்த சில ஆண்டுகளாக நாணய மீளிணைப்பின் காரணமாக ரூபாய்ப் பெறுமதியின் படிப்படியான தேய்வு முதன்மையாக அமைகிறது.

றப்பர் உற்பத்தியானது, 3,500 இலட்சம் இருத்தல் வெளியீட்டுடன் 1970 இல் உச்சக் கட்டத்தை அடைந்ததன்பின்னர், 1972 இல் உற்பத்தி 3,090 இருத்தலிற்கு வீழ்ச்சியுற்றது. இறப்பர் உற்பத்தி, 1974 இல் 3010 இலட்ச இருத்தல்களில், 1966 க்குப் பின்னர் எவ்வேளையும் இல்லாத குறை வான மட்டத்தில் அமைந்தது. 1974 இல் உற்பத்தி 400 இலட்ச இருத்தல்க ளால் வீழ்ச்சியுற்றலும், ஏற்றுமதி வருவாய்கள் ஏறக்குறைய ரூ. 1,470 இலட் சத்தால் உயர்ந்திருந்தன. 1974 இல் உற்பத்தி அடையப்பட்ட மட்டத்திற்கு மேல் எல்லையளவாக மட்டும் இருந்த பொழுதும், சி. எ. உரிமைகளின் நியதிகளின் படி வருவாய்கள் 1972 இற்குப் பின்னர் கிட்டத்தட்ட 250 சதவீதத்தால் உயர்ந்திருந்தன. தெங்குக் கைத்தொழில், 1973 இல் உற்பத்தியின் 38 சத வீதத்திலான வீழ்ச்சிக்குப் பின்னர், 1974 இல் உற்பத்தியை எல்லையளவிற்கு மட்டும் உயர்த்தியிருந்தது 1974 இன் மட்டத்தில் தெங்கின் வெளியீடு 29,630 இலட்சக் காய்கள் கொண்ட 1972 இன் என்றுமில்லா உற்பத்திக்கு இன்னும் 33 சதவீதத்தால் குறைவுடையதாகக் காணப்பட்டது. 1974 இல் உற்பத்தியில் எல்லையளவான உயர்ச்சி காணப்பட்டபோதிலும், 1974 இல் தெங்கு பெற்ற மிக உயர் விலைகள் இக்கைத்தொழிலிற்கு அதன் ரூபா வரு வாயினையும் சி. உ. எ. நியதிகளின் வருவாயினையும் இரட்டிப்புக்கு மேலாகப் பெறுவதற்கு முடிந்தது. தெங்கு உற்பத்தியினது வீழ்ச்சியின் விளைவுகள், சென்மதிநிலுவை மட்டுமன்றி வாழ்க்கைச் செலவையும் பாதிக்கின்றது. ஏனெனில், வெளியீட்டின் பெரும்பங்கு உள்நாட்டுச் சந்தையை அடைகிறது. வாழ்க்கைச் செலவுக் குறிகாட்டிப் பண்டங்களில் தேங்காய் எண்ணெய், தேங்

## அட்டவணை I-7

## முதன்மை ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியும் வருவாய்களும்

| ஆண்டு | தேயிலை | | | றப்பர் | | | தெங்கு | | | பெறுமதிகளின் மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உற்பத்தி (ப. இ. இருத்தல்கள்) | ஏற்றுமதி வருவாய்கள் (ப. இ. ரூபாய்கள்) | சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பெறுமதி (ப. இ. ரூ.) | உற்பத்தி (ப. இ. (இருத்தல்கள்) | ஏற்றுமதி வருவாய்கள் (ப. இ. ரூபாய்கள்) | சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பெறுமதி (ப. இ. ரூ.) | உற்பத்தி (ப. இ. (இருத்தல்.) | ஏற்றுமதி வருவாய்கள் (ப. இ. ரூபாய்கள்) | சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பெறுமதி (ப. இ ரூ.) | மொத்த ஏற்றுமதி பெறுமதி (ப. இ. ரூ.) | மொத்த சிறப்பு எடுப்பனவு உரிமைகள் பெறுமதி (ப. இ. ரூ.) |
| 1965 ... | 503.2 | 1,210 | 203.36 | 260.8 | 303 | 50.92 | 2,676 | 275 | 46.21 | 1,949 | 327.56 |
| 1966 ... | 490.3 | 1,027 | 172.61 | 288.8 | 337 | 56.63 | 2,461 | 196 | 32.94 | 1,700 | 285.71 |
| 1967 ... | 486.7 | 1,061 | 178.32 | 315.7 | 282 | 47.39 | 2,416 | 167 | 28.07 | 1,690 | 284.03 |
| 1968 ... | 495.5 | 1,162 | 195.29 | 328.0 | 330 | 55.46 | 2,601 | 334 | 56.13 | 2,035 | 342.02 |
| 1969 ... | 484.2 | 1,061 | 178.32 | 332.7 | 431 | 72.44 | 2,440 | 225 | 37.81 | 1,916 | 322.01 |
| 1970 ... | 467.9 | 1,120 | 188.16 | 350.9 | 440 | 73.92 | 2,510 | 240 | 40.32 | 2,033 | 341.54 |
| 1971 .. | 480.1 | 1,144 | 192.19 | 311.2 | 307 | 51.58 | 2,617 | 280 | 47.04 | 1,947 | 327.10 |
| 1972 ... | 470.6 | 1,162 | 171.39 | 309.4 | 265 | 39.08 | 2,963 | 266 | 39.23 | 2,009 | 296.31 |
| 1973 ... | 465.8 | 1,261 | 165.27 | 341.0 | 592 | 77.59 | 1,935 | 145 | 19.00 | 2,617 | 342.99 |
| 1974 .. | 449.8 | 1,360 | 168.94 | 301.0 | 738 | 91.68 | 2,031 | 397 | 49.32 | 3,472 | 309.94 |

மூலங்கள்: சுங்கம், இலங்கை தேயிலை றப்பர் கட்டுப்பாட்டு அதிகாரி, இலங்கை மத்திய வங்கி

காய் ஆகிய இரண்டு முக்கிய இடத்தைப் பெறுகின்றன. எனவே உற்பத்தி மட்டங்களின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகள் உள்நாட்டுச் சந்தையின் விலைகளை உயர் அளவுகளில் வைத்திருக்கக்கூடியதாக அமைகின்றன. தெங்கைப் பொறுத்த மட்டில் 1974 இன் உற்பத்தி 1972 இன் மட்டத்தில் இருந்திருப்பின் ஆண்டிற் பெறப்பட்ட உயர் விலைகளின்படி, தெங்கின் ஏற்றுமதி வருவாய் மட்டும் ரூ. 1,500 இலட்சத்தால் கூடியதாக அமைந்திருக்கும்.

மரபு வழிப் பெரும்பயிர்களது வீழ்ச்சியின் தாக்கத்தை, உற்பத்தி வீழ்ச்சி யின் விளைவால் நாடு இழந்த வெளிநாட்டுச் செலாவணியின் அடிப்படையில் மட்டுமே கணக்கிட்டு அளவிடமுடியும். தேயிலை, இறப்பர், தெங்கிற்கான 1974 இன் விலைகளின் மட்டம் 1970 உற்பத்தி மட்டத்தினைப் போன்று இம் மூன்று கைத்தொழில்களும் வைத்திருந்தனவென எடுத்துக்கொள்ளப்படின், பெற்றிருக்கக்கூடிய மேலதிக வெளிநாட்டுச் செலாவணி வருமானம் ரூ. 6,000 இலட்சத்தில் அமைந்திருக்கும். மரபு வழி ஏற்றுமதித் துறையையொட்டி பெருமளவாக அதற்கு, 1974 இல் வெளிநாட்டு வருவாயை உயர்த்த அரிய வாய்ப்பு எழுந்தது. எனினும், நீண்ட காலமாக குறைவான மட்டத்தில் இருந்த நாட்டினது வெளிநாட்டு இருப்பினை குறிப்பிடத்தக்க அளவில் கூட்ட முடியா திருந்தது. இது நிகழக்கூடியதாக இருந்திருப்பின், 1973 இன் அளவில் செய் தது போன்று நாடு, வங்கிக் கடன்பாடுகளையும், வேறு குறுகிய காலப் பொறுப் புக்களையும் பயன்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டிராது.

பெருந்தோட்டத் துறை வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி, அதன் மீது உட னடிக் கவனம் செலுத்த வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது. இது, நீண்ட கால விளைவுகளைக் குறிப்பாக, வெளிநாட்டுச் செலாவணிக் கிடைப்பிலும், பொருளாதார வளர்ச்சியிலும் ஏற்படுத்தக்கூடும். ஏனெனில் தற்பொழுது வெளிநாட்டுச் செலாவணிக் குறைபாடே உயர்ந்தளவு வளர்ச்சிக்கு இடர்ப் பாடாக உள்ளது. பெருந்தோட்டப் பயிர்கள் பெருமளவில் வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தரும் துறையாக நீண்ட காலத்திற்கு இருக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. இரத்தினக் கற்கள் உட்பட எந்த மரபு வழியற்ற ஏற்றுமதிகளும் வெளிநாட்டுச் செலாவணிக்கான பெரும் மூலங்க ளான தேயிலை, இறப்பர், தெங்கினை நல்ல முறையில் ஈடு செய்யும் ஏற்றுமதிக ளாக விளங்கும் என்பதற்கான அறிகுறிகள் இல்லை. உற்பத்தி செய்யக்கூடிய எல்லாத் தேயிலை, இறப்பர், தெங்கினை விற்பதில் நாடு எதுவித இடர்களையும் எதிர்நோக்கவில்லை. மேலும் கூடியளவு உற்பத்தி செய்ய முடியாமையிருப்பதே நாட்டை எதிர்நோக்கும் இடர்ப்பாடாகும்.

அண்மையில் உற்பத்தி வீழ்ச்சிக்கு ஏதுவாக விளங்கிய சுருங்கிய காலப் பகுதியில் கவனமாகப் படித்து ஆய்வு செய்தல் வேண்டும். எனினும், இந்நிலை யில் எல்லா காரணிகளையும் தெளிவாக வரையறுப்பது சிக்கலானது. ஆயினும், சில வெளிப்படையானவை. இங்கு, மேலும் குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் உற்பத்தியைப் பாதித்த முக்கிய காரணிகள் உண்மையில் கைத்தொழிலுக்கு அப்பாற்பட்டவையாகும். இந்நிலையைக் கைத்தொழிலாலும் தவிர்த்திருக்க முடி யாது. 1970 இன் முற்கூறு முதல் பெருந்தோட்டத்துறையில் நாட்டுடமை யாக்கும் அச்சுறுத்தல் காரணமாக நிலையற்ற சூழ்நிலை பெருமளவில் நிலவியது. அத்துடன் பண்டத்தின் விலைகளும் மந்தமான நிலையில் இருந்தன. இதன் விளை

வால் பெருந்தோட்டவுடைமைகளை நல்ல நிலையில் பாதுகாப்பதற்கான முத லீட்ட மட்டத்தில் வீழ்ச்சி ஏற்பட்டமை காரணமாகப் பெருமளவான இவ் உடைமைகள் புறக்கணிக்கும் நிலையிலிருந்தன. 1974 இல் விலைகள் உயர்ந்த பொழுது, செழிப்பினுல் ஏற்பட்ட நன்மைகளை ஆகக்கூடியளவில் பெறுமள விற்கு இக்கைத்தொழில்களால் முடியவில்லை. உற்பத்தியை உயர்த்த இவ் வாறன நிலையில் குறுகிய இரண்டு ஆண்டுக்காலப்பிரிவில் நிலச்சீர்திருத்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியமை, ஏற்றுமதி வருவாய்களது நிலையில் பெரும் எதிர் விளைவுகளைக்கொண்டிருந்தது. நிலச்சீர் திருத்த அறிவித்தலுடன் தங்கள் நிலங்கள் எடுக்கப்படும் என அறிந்த தோட்ட உரிமையாளர்கள், அவற் றைப் புறக்கணிக்கத் தொடங்கியமை, தோட்டப் பாதுகாப்பு மீதான குறைந்த செலவீடு என்பன உற்பத்தியை உயர்த்த முடியா நிலையை ஏற்படுத்தியது.

அறிக்கையின் வேறு பகுதியிலுள்ள தரவுகள் தேயிலைப்பயிரின் வீழ்ச்சி பெரும்பாலும் தாழ்நில தேயிலை வகைக்குரிய நிலங்களில் ஏற்பட்டதாகக் காட்டு கின்றன 1973க்கு முன்பு, நில அமைப்பு வகைக்குரிய தேயிலைக்கான மந்த விலைமட்டத்தைத் தவிர பெரும்பாலான தாழ்நிலத்தேயிலை நிலங்கள் கூட்டு நிலையங்கட்கு உரியதல்லா உடைமைகளாக இருந்தன. அவைகளே நிலச்சீர் திருத்தத்தின்கீழ் வந்தன. இறப்பர், தெங்கைப் பொறுத்தும், இவற்றையே கூற முடியும். நிலச்சீர்திருத்தத்தின்கீழ் வந்த. பெருந்தொகையான தெங்கு சிறு உடைமைகளும் இறப்பர் தோட்டங்களும் நல்ல முறையில் முகாமைப் படுத்தப்படாமையால் உற்பத்தி தொடர்ந்தும் வீழ்ச்சியுற்றது. தெங்கைப் பொறுத்தமட்டில், 195,000 ஏக்கர் தெங்கு நிலங்கள் நிலச்சீர்திருத்தத்தின் கீழ் வந்தன. இவ்வுடைமைகளையொட்டிய நிலை திருப்தியற்றதாகவுள்ளது. ஏனெனில், தெங்கிற்கு இறப்பர் போன்றல்லாது முறையான வளமாக்கிப் பயன்பாடும், பாதுகாப்பும் தேவைப்படுகிறது.

எனவே, பெருந்தோட்டத்துறையின் முழுமையான வீழ்ச்சிக்கு செலவீட் டத்தின் உயர் அளவிற் குறைப்பும், நிலச்சீர்திருத்தத்திட்ட நடைமுறைப்படுத் தலின் பின்னர் கடந்த மூன்று ஆண்டுகளில் நிலவிய நிலையற்ற சூழ்நிலை என் பனவற்றைக் காரணங்களாகக் கூறலாம். இவற்றின் விளைவால் மீள நடுகை செலவு மீதும், வளமாக்கியிடல், உடைமைகளை நல்ல நிலையில் பேணுவதற் கான செலவுகள்மீது பெரும் குறைப்பு ஏற்பட்டன. நாட்டினது தற்போதைய பொருளாதார நெருக்கடியில் தேயிலை, இறப்பர், தெங்குப் பயிர்களினது தரத் தின் அபிவிருத்தி பற்றி வலியுறுத்தாமலே உணரப்படும். குறிப்பாகத் தேயிலைக் கைத்தொழிலைப் பொறுத்தவரை, உற்பத்தி இன்றும் மிகப்பழைய பெருந்தோட் டங்களில் தங்கியுள்ளது. அவைகள் உயர் விளைச்சல்தரும் வளர்பெருகு செடி களைக்கொண்டனவாக இல்லை தேயிலை உற்பத்தியின் கணிசமானளவு வரு வாய் உயர்விளைவு தரும் செடித்தொகுதிகளை மீள நடுவதில் தங்கியுள்ளது. தூண்டுதல், மீள்நடுகை உதவு தொகை அமைப்பில் வழங்கப்பட்ட நிலையிலும், மீளநடுகை அளவுவீதம் குறிப்பிடத்தக்களவு குறைவுற்றுள்ளது. அதேவேளை யில் தேயிலை தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட பொறிகளும், கருவிகளும் இக் கைத்தொழிலின் தொழில்நுட்பவியல் மாற்றங்கட்கு ஏற்ப ஈடுகொடுக்கவில்லை. இலங்கை இந்நிலையில் ஆபிரிக்க நாடுகளின் சிறந்த தொழில்நுட்பவியல் தேயிலைக் கைத்தொழில்களின் உயர்நிலைக்கு ஈடுகொடுக்கவேண்டியிருந்தது. பெருந்தோட்

டக்கைத்தொழிலில் முதலீட்டை உயர்மட்டத்தில் பேணுவதற்கு மிகவும் இன்றியமையாத கவனிப்பு என்னவெனில், திறமையாக நடாத்துவதற்கும், பேணுவதற்குமான தற்போதைய ஒழுங்குகள் நீண்ட காலப்பகுதிக்கு தொடரும் என்பதற்கான ஒரு உறுதியுரையாகும். கடந்த காலத்தில் பெருந்தோட்டக் கைத்தொழில்களின் பெருமளவு உற்பத்திக்கு நல்ல முகாமையே காரணமாவதோடு, முன்னைய ஆண்டுகளில் முகாமையின் தரம் பற்றி எதுவித ஐயமுமிருக்கவில்லை. மேலும் நம்பிக்கையும் உறுதியும் கொண்ட ஒரு சூழ்நிலையில்தான் பெருந்தோட்டக்கைத்தொழில் இலாபங்களை ஈட்டிப்பெற முடியும் அல்லது அவற்றின் முதலீடுகளை கடன்வழங்கும் முகவர் நிலையங்களில் பெறும் கொடுகடன்கள் வாயிலாகக் கூட்ட முடியும்.

**காணிச் சீர்திருத்தம்**

மத்திய வங்கி, காணிச் சீர்திருத்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட காணிகளின் ஆய்வு மூன்றினை ஏற்றுக்கொண்டது. இவ்வெளிக்கள ஆய்வுக்கான காரணம் இவ்வுடைமைகள் எவ்வாறு முகாமைப்படுத்தப்படுகின்றன என்பதற்காகவும், இக்காணிகளின் உற்பத்தி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு செலுத்தும் பங்கை ஒரு முழு அளவு நிலையில் பெறுவதற்குமாகும். இவ்வேளாண்மை நிலங்கள் பெறுமதிவாய்ந்த பயிர்களான தேயிலை, இறப்பர், தெங்கு என்பனவற்றையும் மேலும் பரந்த அளவில் துணைப்பயிர்களையும் கொண்டுள்ளன. இப்பயிர்கள், நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியைப் பெற இயல்புடைய நிலையில் இன்றியமையாதனவாகின்றன. காணிச் சீர்திருத்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட நிலங்களின் உற்பத்தியாக்கம் உயர்ந்த அளவில் உயர்த்தப்பட்டால் சென்மதி நிலுவை மீதான சிக்கலைக் குறைப்பதற்கு குறிப்பிடத்தக்க பங்கை அளிக்கும் என்பதில் ஐயமில்லை

காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிடம் உடைமையாக்கப்பட்ட நிலங்களில் ஏறக்குறைய 50 சதவீதம் மட்டுமே, நிலங்களை முகாமைப்படுத்தக் குறிப்பாக நிறுவப்பட்ட உசவசம, பலநோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவு இருப்பிடங்கள், அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், கால்நடை அபிவிருத்திச் சபை போன்ற தனிப்பட்ட நிலையங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்நிலங்கள், உடைமையாக்கப்பட்ட மொத்த ஏக்கர் பரப்பில், 270,000 ஏக்கர்களை அடக்குகின்றன. சில 288,000 ஏக்கர்கள் இன்றும், காணிச்சீர்திருத்த ஆணைக் குழுவிலும் காணி ஆணையாளராலும் முகாமைப்படுத்தப்படுகின்றன. இக்காணிகள் எவ்விதம் முகாமைப்படுத்தப்படவேண்டும் என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இப்பகுதி, காணி ஆணையாளர், காணிச்சீர்திருத்த ஆணையின் நேரடிக் கண்காணிப்பிற்குக் கீழ் வந்த உடைமைகளை விடுத்து இத்தேவைக்கென குறிப்பாக உருவாக்கப்பட்ட நிலையங்களால் முகாமைப்படுத்தப்படும் காணிகளையே பெருமளவில் குறிப்பிடுகிறது.

இலங்கை அரசத் தோட்டக் கூட்டுத்தாபனத்திடம் ஏறக்குறைய 32,000 ஏக்கர்கள் கொண்ட 38 தோட்டங்கள் முகாமைக்கு ஒப்படைக்கப்பட்டன. பெரும்பாலான தோட்டங்கள் பெருமளவு சீரான முறையில் நடாத்தப்படுகின்றன. எனினும், சில உடைமைகளில் புறக்கணிக்கப்பட்டமைக்கு சான்றாக குறைந்த அளவான வளமாக்கிப் பயன்பாடும், களை பிடுங்கல் நடவாமையும்

காணப்படுகின்றன. ஆனால் பெரும்பாலான உடைமைகளில் உற்பத்தியும் முகாமையும் குறிப்பிடத்தக்களவு திருந்தியுள்ளன. முன்பு பணிபுரிந்த கண்காணிப்பாளர்களும், துணைக் கண்காணிப்பாளர்களும் தொடர்ந்து அமர்த்தப் பட்டதுடன், எங்கு புதிய அலுவலர் எடுக்கப்பட்டனரோ, அவர்கள் பயிர்ச் செய்கை அனுபவம் பெற்றவர்களாக விளங்கினர். இங்கு குறைபாடு என்னவெனில், தனியார்துறையுடன் ஒப்புநோக்குகையில், முகாமை அலுவலர்கட்கு வழங்கப்பட்ட குறைந்தளவு ஊதியமும், உந்துதல்களுமாகும்

அரச தோட்டக் கூட்டுத்தாபனத்தால் முகாமைப்படுத்தப்பட்ட தோட்டங்களினது கண்காணிப்பாளரின் முடிவெடிக்கும் அதிகாரம் குறைக்கப்பட்டது போல் தோன்றுகிறது. இது, உயர்மட்டத்தில் உற்பத்தியைப் பேணுவதற்கும் பொறிகளைத் திருத்த அல்லது செலவு செய்யத் தடைகளையும் விளைவித்தது. மூலதனச் செலவுக்கான வேண்டுகோளும் கொடுப்பனவுகள் செய்வதற்கான மேலாண்மையும் தலைமை அலுவலகத்திடமிருந்து விடுக்கப்பட்ட பொழுது இங்கு மேலாண்மை பெறுவதற்கு குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் இருந்தன. இத் தாமதங்கள் உற்பத்திக்கும் பேணலிற்கும் மிகவும் இன்றியமையாத தோட்டத் தேவைகளைப் பாதித்தன. தோட்டப்பார்வை முகவர்கள் அமைப்பானது முகவர்கள் நிலையங்களின் கீழ் போன்று நல்லமுறையில் இயங்கவில்லை. சிலவற்றில் பார்வையிடும் முகவர்கள் தோட்டங்களைப் பார்வையிடச் செல்லவில்லை. சிலவற்றில் ஒப்படைக்கப்பட்ட அறிக்கைகட்கான நடவடிக்கை மெதுவாக இருந்தது தற்பொழுது இலங்கை அரசத் தோட்டக் கூட்டுத் தாபனம், தனது கட்டுப்பாட்டுக்குக் கீழான தோட்டங்களின் எண்ணிக்கையை கட்டியிருப்பதால் பிரதேச அலுவலகங்களைத் திறப்பதற்கான வாய்ப்புண்டு; அவற்றிடம் செலவு, முதலீடு பற்றிய இன்றியமையாத் தீர்மானங்களை ஒப்படைக்கலாம்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குஉடைமையாக்கப்பட்டு தற்பொழுது உவசம[1] வினாலும் மற்ற முகவர் நிலையங்களினாலும் முகாமைப்படுத்தப்படும் பெரும்பாலான தோட்டங்கள் எடுப்பதற்கு முன்னர் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்தன. உடைமைப் பயிர்ச்செய்கையாளரரிற்குச் சொந்தமான உடைமைகளைவிட முகவர் நிலையங்களால் முகாமைப்படுத்தப்பட்ட உடைமைகள் நல்ல நிலையில் இருந்தன. எனினும் சரியான புறக்கணிப்பு ஆண்டுகளின் எண்ணிக்கையினை நிர்ணயிப்பது கடினம். எனினும் அவற்றின் பெரும்பாலானவை காணிச் சீர்திருத்தத்திட்டம் உருவாகிய பொழுதே சீர்குலையத் தொடங்கியதாகத் தெரிகிறது. பெரும்பாலன தோட்டங்களில் முன்னைய முகாமையாளர்கள் தம் பணிகளிலிருந்து நீக்கப்பட்டனர். திட்ட முகாமையாளர்களது ஊதியங்கள் அவர்களது அனுபவம், தோட்டங்களின் அளவு அபிவிருத்தியாக்கத் திட்டத்திற்கேற்ப வரையறுக்கப்படவில்லை. தோட்டங்களுக்குப் பொறுப்பாக அமர்த்தப்பட்ட புதியவர்கள், தம் தொழிலையொட்டி உற்சாகமாகப் பணிபுரிந்தார்களெனினும், அவர்களிடம் பயிர்ச் செய்கையைப்பற்றி மிகவும் குறைந்தளவு அனுபவமே காணப்பட்டது. தோட்டங்களின் நடைமுறை நிலையில் அவற்றின் உற்பத்தியாக்கதியலளவை உயர்த்த தற்பொழுது குறிப்பிடத்தக்களவு முதலீடு

1. ம. நா. கூ. சீசவையானது 8 பேர்கள் கொண்ட முகாமைச் சபையால் கூட்டுறவு அடிப்படையில் சிறு தோட்ட உடமைகளை முகாமைப் படுத்துவதற்கு உருவாக்கப்பட்டது.

தேவைப்படுகிறது. ஆனால் இது முடியுமானதன்று. ஏனெனில், தோட்டங்கள் அவற்றின் நடைமுறை வருவாய்க்கு மேல் செலவிடக்கூடாது என்ற அடிப் படையில் நடாத்தப்பட்டமையாகும். உற்பத்தி வீழ்ச்சியடைந்ததற்குப் பின்பு வருமானங்கள் கீழிறங்க மூலதன அபிவிருத்திக்கான போதிய மூலவளங்கள் கிடைக்கவில்லை. பெரும்பாலான தோட்டங்களில் உற்பத்தியை உயர்த்துவதற்கு, கருவிகள் தொழில் கூடங்களுக்கான உதிரிப் பாகங்கள், குறைந்த போக்குவரத்து வசதிகள் என்பன தடையாகவுள்ளன. இவ்வுள்ளீடுகளை வழங்கச் சரியான வேளையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கான சான்றிகள் மிகவும் குறைவாகும்.

பயிர் பன்முகப்படுத்தல் திட்டமானது மிகவும் விரைந்து மேற்கொள்ளப் பட்டது. பெரும்பாலான தோட்டங்களில் தற்பொழுதுள்ள தேயிலை பிடுங்கப் பட்டது. ஆனால் பயிரிடப்பட்ட பயிர்கள் வெற்றியளிக்கவில்லை. பெரும் பாலானவற்றில் பயிர்களின் தேர்வு திருத்தியற்றதாகவிருந்தது. குறிப்பாக பல பயிரினங்களைத் தேயிலைத் தோட்டங்களில் வளர்ப்பது சிக்கன மற்றது. பெருமளவு நடைமுறையில் தனிப்பயிராகப் பயிரிட்டபொழுது தேயிலை உற் பத்தி நன்றாக உள்ளது. உற்பத்தியை உயர்த்தும் நோக்கத்துடன் திட்டமிடப் பட்ட பன்முகப்படுத்தலைவிட ஒழுங்கற்ற பன்முகப்படுத்தும் தீர்மானமே இருப்பதாகத் தோன்றுகிறது. முடிவு எடுப்பதில் பன்முகப்படுத்தும் தன்மை நிலவாததுடன் செயற்றிட்ட முகாமையாளருக்கு சிறிதளவு பன்முகப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டது.ஏறக்குறைய எல்லாத்தோட்டங்களிலும் கணக்குகள் தரக்குறைவான ஒழுங்கற்ற நிலையில் பேணப்பட்டதுடன் அவைகள் பொரு ளாதார முடிபுகள் எடுப்பதற்கான வகையில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

ஜனவாசங்கட்கு (கூட்டுறவு வசிப்பிடங்கள்) ஏறக்குறைய 39000 ஏக்கர்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. எதிர்காலத்தில் இவ்வகைப்பண்ணை முகாமைக்கு மேலும் நிலப்பரப்புக்கள் ஒதுக்கப்படலாம் எனத் தோன்றுகிறது. நாட்டில் முயற்சிக்கப் பட்ட கூட்டுப்பண்ணைப் பரிசோதனையில் இதுவே மிகவும் பரந்து பட்டது. எதிர்கால காணிச்சீர்திருத்தக் கொள்கைகள் உருவாக்கத்தில், இப்பண்ணைகளின் அனுபவம் இன்றியமையாச் செல்வாக்கைச் செலுத்தும் இந்தப் பிரிவில் அடங்கும் காணிகளில் பெரும்பாலான காணிச்சீர்திருத்த ஆணையின் கூட்டுறவு வசிப்பிடங்கள் பிரிவின் கீழ் வருகின்றன. இவ் ஒவ்வொரு ஜனவாசத்தையும் ஒழுங்கான முறையில் திட்டமிட நிறைவானதொரு பயிற்சி மேற்கொள்ளப் பட்டதாகப், தெரிகிறது. இவ்வசிப்பிடங்கள் உருவாக்கத்திற்கு, கூட்டு விழிப் புணர்வும் அபிவிருத்தியும் இவ்வகையானதொரு அமைப்பிற்கான ஈடுபாடும் முக்கியமாகக் கவனிக்கத்தக்கவைகளாகும்.

எவ்வாறுயினும் மேலெழுந்த நிலையில் பல சிக்கல்கள் விளங்கின், ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் செலுத்தப்பட்ட குறைந்த படிகள் நிறைவின்மைக்கு ஏதுவாயிற்று. பெரும்பாலானவற்றில் நிலத்தைத் திருத்தவும் புதிய பயிர்கள் பயிரிடவும் குறிப்பிடத்தக்களவு பணத்தைச் செலவிடத் தேவை ஏற்பட்டதால் குறைந்த படிக் கொடுப்பனவிற்கான கட்டாயம் ஏற்பட்டது. இவ்வுடை மைகள் முன்னைய முகாமையின் கீழ் இருந்த பொழுது ஏக்கரிற்கான தொழி லாளர்களை விட மலைநாட்டுக் கூட்டுறவு காணிச்சீர்திருத்தச்சபை போன்று ஜனவாசத்தின் கீழ் ஏக்கருக்கான குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை பெரும்

பாலும் உயர்ந்ததாகக் காணப்பட்டது. பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்களை சேர்த்துக் கொள்ளப்பட்டவுடன், ஆளுக்கான நடைமுறை உற்பத்தியானது உயர் அளவுப் படிகளைப் கொடுப்பதற்குப் போதியதாக இருக்கவில்லை. மேலும் பயிரிடப்பட்ட புதிய பயிர்கள் வெற்றியைத் தராமையால் அவற்றால் எழுந்த இழப்புக்கள் நிதி நெருக்கடிகளை உருவாக்கின.

இத்தகைய முயற்சிகளின் வெற்றிகரமான நடைமுறைகட்கு உயர்ந்தளவு முதலீடுகள், வேளாண்மைக் கருவிகளின் கிடைப்பு, பயிர்களைக் கவனமாகத் தெரிதல், வசிப்பாளருக்கு வேளாண்மையில் நிறைந்தளவானதொரு பயிற்சி என்பன இன்றியமையாததாகின்றன. பின் கூறப்பட்டதை நடைமுறைப் படுத்தப்பட்டால் செறிவான தொழிலாளர்களைச் சேர்த்துப் பயன் கொண்ட பிரிவுகளாகவும் சிக்கனமாக இயங்கக் கூடிய பிரிவுகளாகவும் அரசியலும், பன்முகப்படுத்தல் திட்ட வேளாண்மையின் வெற்றிக்கு, வசிப்பிடங்கள் மீதான தொழில் நுட்ப அபிவிருத்திக்கான அறிவு மிகவும் உறுதுணையாகின்றது. ம நா. கூ. கா. சீ.சவின் கீழிருந்த உடைமைகள் போன்று இத்திட்டங்களின் கணக்கெடு அமைவு திருப்தியற்றதொரு நிலையில் உள்ளது. உடைமைகளது தொழிற்பாடுகளின் நிதியீட்டத்தன்மை பற்றி கிடைக்கக் கூடிய நிலையில் கணக்குகளை நன்றாகப் பேணுவதற்கான தக்க பயிற்சியை வசிப்பாளருக்கு கொடுத்தல் வேண்டும்.

**கைத்தொழில்**

சென்மதி நிலுவை நெருக்கடியினை நோக்குமிடத்து, கைத்தொழில்களுக்கான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகள் திருத்தியான மட்டங்களில் காணப்பட்டனவெனினும், 1974 கைத்தொழில் துறைக்கு நெருக்கடியானதொரு ஆண்டாகவே இருந்தது. பிளாத்திக்குகள், பருத்தி நூலிழை, இரசாயனப் பொருட்கள், எரிபொருள்கள் போன்ற பல்வேறுபட்ட பொருட்களின் மூலப்பொருட்களினது விலைகளின் உயர்ந்தளவான உயர்ச்சியின் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியாற் பெறக்கூடிய மூலப்பொருட்கள் முன்னைய ஆண்டைவிடக் குறிப்பிடத்தக்களவு குறைவுற்றிருந்தன. கைத்தொழில் உற்பத்திப் பெறுமதியின் அடிப்படையில் 1973இன் ரூ. 27,586 இலட்சத்திலிருந்து 1974இல் ரூ. 40,941 இலட்சமாக உயர்ந்து 1973இன் மட்டத்திற்கு மேல் 48.4 சதவீதமானதொரு உயர்ச்சியினைக் காட்டுகிறது. எனினும் இவ்வெண்தொகைகள் உண்மையான உற்பத்தியின் மட்டத்தின் தன்மையினைச் சரியாகக் கொடுப்பதாக இல்லை. 1974இல் உற்பத்திப் பெறுமதியின் உயர்விற்கு மூலப்பொருட்களின் உயர்ந்தளவான விலைகளே காரணமாகின்றது. இது தயாரிக்கப்பட்ட பொருட்களின் விலைகளில் குறிப்பிடத்தக்களவு உயர்ச்சியை ஏற்படுத்தியது. இதைவிட மத்திய வங்கியின் 1974இன் கைத்தொழில் அளவை, முன்னைய வேளைகளில் தரவுகள் பெறப்பட்டிராத கைத்தொழில் முயற்சிகள் உள்ளடக்கியமையால் ஏறக்குறைய 5 சதவீதத்தால் உயர்ந்திருந்தது. உண்மை உற்மத்தியின் அடிப்படையிற் பார்க்கையில் விலைகளது வெகுவான உயர்ச்சிகளுக்கு இடம்விட்டு நோக்குகையில் 1974இன் உற்பத்தியானது முன்னைய ஆண்டு மட்டத்திற்குக் கீழ் உள்ளது. தயாரிப்புத் துறையைப் பொறுத்தவரை உண்மை அடிப்படையைப் பார்க்கையில் வெளியீடு 4.1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதைக் காட்டுகிறது.

குறிப்பாக கைத்தொழில் உற்பத்தியில் செலவு பெரிதாக விளங்கியமைக்கு பெற்ரோலிய உற்பத்தியில் ஏற்பட்ட 300 சதவீதம்கொண்ட மிக உயர்ந்த விலைகளே காரணம். 1974இல் பெறுமதி அடிப்படையில் பெற்ரோலிய உற்பத்தி 151 சதவீதத்தால் உயர்ந்த நிலையிலும் உற்பத்தி அளவு 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. நடைமுறை விலைகளில் உற்பத்தியாக்கத்தின் பெறுமதி உயர்ச்சியிலிருந்து பெற்ரோலியப் பொருட்களினை அதிகரிக்கச்செய்த பெறுமதி தவிர்க்கப்பட்டால் ஏனைய துறைகளின் வெளியீட்டுப் பெறுமதி உயர்ச்சி 33 சதவீதமாகும்.

தனியார்துறைக் கைத்தொழிலின் இயலளவுப் பயன்பாடு குறைவாகவும் சராசரி 40 சதவீதமாக அமைந்தது. இதற்கு 1960க்கு பின்பு நிறுவப்பட்ட பெரும்பாலான கைத்தொழில்கள் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் மீது மிகுந்தளவு தொடர்ந்தும் தங்கியிருந்ததே காரணமாகும். எனவே பெருமளவு இயலளவுப் பயன்பாடு ஒதுக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகளில் தங்கியிருக்கிறது. இது கைத்தொழிற் துறைக்கு நிலையானதொரு சிக்கலை உருவாக்கியுள்ளது. உணவுப்பொருட்கள், மருந்துகள் ஏனைய இன்றியமையாத பொருட்களை அடுத்து கைத்தொழிலில் மூலப்பொருட்கள் இரண்டாவது இடத்தைப் பெறுவதால் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டக் கூடியதும் ஏற்றுமதி சார்ந்தனவானதுமான கைத்தொழில்களைத் தவிர ஏனைய கைத்தொழில்களுக்கு இறக்குமதித் தேவைகளையொட்டி நாட்டின் வெளிநாட்டுச்செலாவணி போதிய ஒதுக்கீட்டுக்கு இடம்கொடுக்காது. இதன் காரணமாக, எதிர்காலத்தில் இக்கைத்தொழில்கள் ஏற்றுமதி சார்ந்தனவாக விளங்காத நிலையில், தம் இயலளவுப் பயன்பாட்டைப் பெருமளவு பயன்படுத்தும் வாய்ப்பைப் பெறும் என்று எதிர்பார்க்க முடியாது. மேலும் கைத்தொழில் முடிபுப் பொருட்களில், பெரும்பாலானவற்றிற்கு உயர்விலைகளின் காரணமாக ஓரளவு நுகர்வோர் எதிர்ப்பும் உண்டு. சந்தைவிலைக்குக் கூடுதலாக பொருட்களின் விலைகள் நிர்ணயிக்கப்பட்டதன் காரணமாக கைத்தொழில் கூறுகள் தம் இயலளவிற்குக் குறைவாகத் தொழிற்பட்டன. 1974இல் பெரும்பாலான கைத்தொழில்கள் வெளிநாட்டுச் செலாவணி பெறமுடியாத சில மூலப்பொருட்களை மாற்றத்தக்க ரூபாக் கணக்குகளைப் பயன்படுத்தி நிதியைப் பெற்றன.

பெரும்பாலான அரசதுறை கைத்தொழில் கூட்டுத்தாபனங்களைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்களவு உயர்ச்சிகளைக் காட்டவில்லை. நேராகவும் மறைமுகமாகவும் நுகர்வோர் பொருள் வழங்கலையும் வாழ்க்கைச் செலவினையும் பாதிக்கும் உணவுப்பொருட்களையும் வேறு பொருட்களையும் உற்பத்தியாக்கும் (சீனிக் கூட்டுத்தாபனத்தைத் தவிர) கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களைப் பொறுத்து இது உண்மையே. குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டுகள் பால் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக்கொண்ட பாற்சபை, மீன்பிடிக் கூட்டுத்தாபனம், விலங்கு உணவு வகைகளைப் பெரும்பாலும் வழங்கும் எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம் என்பனவாகும். உற்பத்தியின் இவ்வீழ்ச்சி கோழிப் பண்ணை கால்நடை கைத்தொழில்கள்மீது பெருமளவான பாதிப்பினை ஏற்படுத்த, இன்றியமையாத உணவுப்பொருட்களின் விலை உயர்விற்கும் காரணமாயிருந்தது.

தனியார்துறையைவிட மிகவும் தாராளமான அடிப்படையில் அரசதுறை யினது கைத்தொழில்களுக்கான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகள் கிடைக் கக்கூடியதாக இருந்தாலும் இயலளவுப் பயன்பாடு குறைவாகவே இருந்தது. இதற்கு வெளிநாட்டுச் செலாவணிப் பற்ருக்குறையும் உள்ளீட்டக் கிடைப் பின்மையுமே முழுமைக் காரணம் என்று கூறவியலாது. மாருக பெரும்பாலான கைத்தொழில்கள் இலாப அடிப்படையில் ஏற்றுமதிசெய்ய முடியாதிருந்த மையே காரணம் என்று கூறலாம். 1974இல் பெரும்பாலான அரச கைத் தொழில்களுக்கு வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடுகள் தாராளமாகக் கொடுக்கப்பட்டன. அவற்றுள் சில, பல மாதங்களுக்குப் போதுமான இருப் பிற்கு நிதியீட்டம் செய்வதற்கான உயர்ந்தளவு ரூபா வங்கிக் கொடுகடன்களை வைத்திருந்தன. எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனத்தை எடுத்துக்கொண் டால், 1964இல் கோழி, கால்நடைத் தீனிகளின் விலை உயர்ந்த மட்டத்தில் இருக்க, இயலளவுப் பயன்பாடு 61.5 சதவீதமாகும். சில்லறை விலைகள் உயர் வாகவும், நாடெங்கிலும் துணிகளுக்கான பற்ருக்குறை இருந்தவேளையுல் தேசியப் புடவைக் கூட்டுத்தாபனத்தின் இயலளவுப் பயன்பாடு ஏறக்குறைய சராசரியாக 40 சதவீதமாக இருந்தது. தேயிலைப்பெட்டிக் கைத்தொழிலிற்கு முதன்மை வழங்குநரான ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தின் சிலாவ தொழிற் சாலையில் இயலளவுப் பயன்பாடு 30.3 சதவீதமாக குறைந்து காணப்பட்டது. இறுதியிற் குறிக்கப்பட்ட தொழிற்சாலை, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தேயிலைப்பெட்டிச் சட்டங்களின் படிப்படி விலை உயர்விற்கு ஓரளவாகுதல் காரணமாயிருந்தது. இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் இயலளவுப் பயன்பாடு ஏறக்குறைய 40 சதவீதமாகும். 1974இல் கைத்தொழில் பிரிவு களில் உயர்வீத இயலளவுப் பயன்பாட்டைக் காட்டுவன ஒருசிலவே; அவற் றுள், இலங்கை ரயர்க் கூட்டுத்தாபனத்தால் அதன் இயலளவில் 90.7 சத வீதத்தைப் பயன்படுத்தக் கூடியதாகவும், காங்கேசன் சீமேந்து பொறித் தொகுதி அதன் நிறுவப்பட்ட இயலளவில் 76 சதவீதத்தையும் பயன்படுத்தக் கூடியதாகவும் இருந்தன.

1974இல் அரசதுறை கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் பெரும்பாலான உற்பத்திகளது விலைகள் பெருமளவில் உயர்த்தப்பட்டன. அவற்றில் பால், கால்நடை உணவுகள், புடவைகள், தேயிலைப்பெட்டிகள், தாள், டயர்கள்' வன்கலம், உருக்கு, பெற்ருேலிய உற்பத்திகள், சீமேந்து என்பனவற்றின் விலை களாகும். பெரும்பாலானவற்றின் விலை உயர்ச்சிகள் 1973இல் நிலவிய விலை களிலும் பார்க்க 50 இலிருந்து 75 சதவீதம் வரை கூடுதலாக அமைய சில வற்றில் 100 சதவீதத்தையும் தாண்டின. 1974இல் விலை உயர்வுகளுக்கான நல்ல உறுதியான காரணங்கள் இருந்தாலும் நுகர்வோர் கருத்தைப் பொறுத்த வரை ஏனைய சில பண்புகளிலும் உரிய கவனம் செலுத்துவதை விரும்பினர். மூலப்பொருட்களினது உயர் கொள்வனவுச் செலவுகள் விலை உயர்ச்சிகளுக் கான தேவையை ஏற்படுத்தினுலும், சிலவற்றின் விலை உயர்ச்சிகள் பெரும் பாலான கூட்டுத்தாபனங்கள் பல ஆண்டுகளாக அடைந்துவந்த இழப்புக்களை களையவும் அல்லது வேறுநிலையில் இலாபங்களின் மட்டத்தை உயர்த்தவும் செய் யப்பட்டன. விலை உயர்ச்சியடைந்த நிலையிலும், பாற்சபை, எண்ணெய் கொழுப் புக் கூட்டுத்தாபனம் போன்றன இழப்பில் தொழிற்பட்டன. இது மீண்டெழும்

இழப்புக்களுக்கு பின்னுள்ள அடிப்படையான காரணிகளைத் திருத்தம் செய்யாமையால் ஏற்பட்டதாகும். இந்நிலையில் விலைமட்டத்தை மட்டும் சீராக்கம் செய்வதனால் பிரச்சினை தீராது. இக்குறைபாடுகளைக் களைவதற்கு திரண்ட முயற்சி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

கைத்தொழில் பொருட்களினது தரத்தை உயர்த்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலும், இத்துறையின் இன்னும் ஆக்கபூர்வமான பெறுபேறுகளைப் பெறுவதற்கு மேலும் கூடிய வாய்ப்பு உண்டு. நுகர்வோர் நோக்கில் கைத்தொழிற் பணி கூட்டுத்தாபனங்கள் உற்பத்தியில் ஈடுபடவில்லை என்பது தெளிவாகிறது. அடிக்கடி விலைகள் கூடுமானவரை 50 தொடக்கம் 75 சதவீதம் வரை உயர்த்தப்பட்டாலும், உற்பத்திகளின் தரத்திலும் நீண்டகாலத்திற்கு நிலைத்துநிற்கும் தன்மையிலும் இதுபோன்ற திருத்தம் இருக்கவில்லை. எனவே உற்பத்தியாக்கத் திட்டத்தில் உற்பத்தியின் தரத்தை திருத்துவதற்குக் கூடிய கவனம் செலுத்துவது மிகவும் இன்றியமையாததாகின்றது. இதன் விளைவாகத்தான் பொருட்களை நுகர்வதில் கூடியளவு செலவுசெய்த நிலையிலும் தனது பணத்தின் பெறுமதிக்கு ஏற்பப் பொருட்களைப் பெறுகிறோம் என்ற மனநிறைவாவது இருக்கும்.